# திராவிடநாடு

மலர் 6 | 5—10—47 | இதழ் 19

## யார் சொல்லைக் கேட்பது!

—✲—

"தன் மதத்தைக் காக்க உயிரைவிடவும் தயாராக இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு குழந்தையும் உணரும்படி செய்யவேண்டும். பிரகலாதன் தனது 12-வது வயதில் தனது தந்தையையே எப்படி எதிர்த்து நின்றான் என்பது எல்லாருக்கும் தெரியும். தன்னுடைய மதத்தில் உறுதியுடனிருக்கும் எந்தப் பெண்ணும் தன் மானத்திற்கோ மதத்திற்கோ வரும் ஆபத்திலிருந்து காத்துக் கொள்ள ஒருக்காலும் அஞ்சவே மாட்டாள்."

காந்தியார்
30—9—47

"மதராஜ்யம் என்ற கருத்து மத்திய காலத்தைச் சேர்ந்தது, அது மதியீனமானது. நவீன காலத்தில், மக்கள் ஒரு மதத்தைப் பின்பற்றுவதானாலும், மதராஜ்யத்தை அமைக்க முடியாது. இந்தியா, இந்துராஜ்யமாக அமைய விடேன்."

ஜவஹர்லால்
30—9—47

16-ம் பக்கத் தொடர்ச்சி

எண்ணி மஞ்சள் துண்டும் குங்குமம் மஞ்சளும் அணிகின்றார்கள். இந்த அறியாமையால் லட்சம் லட்சமாக நமது நாட்டு மக்களை இழக்கின்றோம். ஆதலின் அறியாத பெண்கள் செய்வதையும் மோசமந்திரக்காரர் சொல்வதையும் நம்பாமல் தக்க வைத்தியரைக் கொண்டு அவர்களைப் பார்வையிடச் செய்து (Observation) தெரிந்து கொண்டால் நலமாகும். சிறுவன் தேகத்தினுள் பல ஊசிகள் இருந்ததாகக்கண்ட காட்சியில் விசேடம் ஒன்றும் நமக்குத் தோன்றவில்லை, ஊசிகள் செத்துப்போன சதையில் அந்த சிறுவனுக்குத் தெரியாமலே பொத்துக் கொண்டிருக்கலாம். சில காலத்திற்குப் பிறகு அந்த இடத்தில் ஏதோ காரணத்தால் ரத்தம் பரவவும் ஊசியின் உணர்ச்சி உண்டாயிருக்கலாம். எப்படியெனில்குலோராபாரம் (Chloraform) முதலிய உணர்வை நீக்கும் வஸ்துக்களைக் கொண்டு அச்சமயம் நோய் தெரியாமல் செய்வதுபோல, அச்சிறுவனுக்கு விளையாடுங் காலத்திலோ, அல்லது தேக உறுப்பு உணர்ச்சியற்ற இடத்திலோ, அந்த ஊசிகள் பொத்து இருக்கலாம். பிறகு நோய் தொடுத்திருக்கலாம். இவைகளில் அபூர்வமொன்றுமில்லை.

ஆஸ்பத்திரியில் தீராபல், மந்திரக்காரனால் தீர்ந்தது என்று சொல்வதில் யாதொன்றும் விசேஷமில்லை. ஆஸ்பத்திரியில் எல்லா வியாதிகளும் தீரும் என்பதொன்றுமில்லை. ஆஸ்பத்திரி சிகிச்சையால் தீர்த்துக் கொண்டு வந்திருக்கலாம். வீட்டுக்கு வந்தபிறகு, பூரணமாகக்குணமடைந்திருக்கலாம். இந்தத் தருவாயில், மந்திரத்தை மந்திரக்காரன் செப்பியிருக்கலாம். பிந்தி வந்தவனுக்குக் கிடைத்தது நல்ல பெயர்!!!

பில்லி, சூன்யம், ஏவல், முனி அறைதல், அண்ணமார், கன்னிமார், சேட்டை, காற்று, கறுப்பண்ணன் என்று வழங்கும் சொற்கள் எந்தப் பொருளைக் குறிப்பதாகச் சொல்கின்றவர்களுக்கே தெரியாது. இவை எதுவும் நிச்சயிக்காத (vague) சொற்கள். இன்ன காரணமென்று விளங்காத நோய்களுக்கும், செயல்களுக்கும், இந்தச் சொற்களை காரணமாக உபயோகிக்கின்றார்கள். இந்தச்சொற்களைக் கேட்டமாத்திரத்தில், நடுக்கமுறுகிறார்கள். ஆனால் அவ்வார்த்தைகள் இன்னவை என்று யாரும் பார்த்திலர். அதற்கு ஆடும், கோழியும், முயல் காதும், ஒணானும் தலைச்சன் குழந்தை கை கால் விரலும், மஞ்சளும், குங்குமமும் நால் வழிகூடும் இடமும், சுடுகாடும், புறக்கடையும் இன்னும் பல சம்பந்தமில்லா மந்திர தந்திரங்களும் பரிகாரங்களென வழங்குகிறார்கள். இத்தியாதி பித்தலாட்டங்களால் பாமர மக்கள் மயங்கித், தங்கள் பிள்ளைகளைச் சரியான சிகிச்சையின்றிச் சாகவைக்கின்றார்கள், இந்தச் சமூக மோசங்களைத் தடுப்பதற்கு வைத்தியஞானம் பாமர மக்களுக்குப் பரவச்செய்ய வேண்டும். இரண்டாவது ராஜாங்கத்தார் "மத நடுநிலை" என்ற பாசாங்கை விட்டு விட்டு, பில்லி, சூன்யமென்று ஏமாற்றுகின்றவர்களைத் தண்டிக்கச் சட்ட விதிகள் செய்யவும் வேண்டும்.

குறிப்பு:—பல தோழர்கள்,பில்லி-சூனியம்-மந்திரம் ஆகியவை உண்மையா என்று அடிக்கடி எழுதிக் கேட்கின்றார்கள். அவர்கட்கு இக்கட்டுரை சமாதானமளிக்குமென்று நம்புகிறோம்.

## மறைவு

குடந்தை, திராவிடர் கழக நிர்வாகக் குழு அங்கத்தினரும், பிரபல வியாபாரியுமான தோழர் V. பராங்குசம் அவர்கள் தந்தையும், முன்னாள் டவுன் ஹைஸ்கூல் ஹெட்கிளார்க்குமான தோழர் R. வேணுகோபால் நாயுடு அவர்கள் 30—9—47ல் இயற்கை யெய்தினர்.

சென்னை கொன்னூர் மதுரகவி வீ. வே. முருகேச பாகவதர் அவர்களின் தாயார் தெய்வயானை அம்மையார் அவர்கள் 9-9-47 செவ்வாய்க்கிழமை பகல் 3-30 மணிக்கு உயிர் நீத்தார்.

## திருமணம்

11—9—47ல் சென்னைத் தோழர் க. வி. சோமசுந்தரம் — வனஜா வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் C. N. அண்ணாத்துரை தலைமையில் காஞ்சிபுரத்தில் சிறப்பாக நடைபெற்றது.

3—9—47ல் தென்காசித் தோழர் சண்முகம்—இராசம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் V. G. சந்தானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

* * *

5-9-47-ல் சேலம் தோழர் இராமலிங்கம்—பார்வதி வாழ்க்கை ஒப்பந்தம் கும்பகோணம் தோழர் முத்துதனபால் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## விளக்குடி

விளக்குடியில் 22—8—47ல் தோழர் தி. போ. வேதாசலம் B. A., B. L. தலைமையில் சீர்திருத்த மணம் தோழர் கு. பாலகிருஷ்ணனுக்கும் தோழியர் ந. தர்மாம்பாளுக்கும் நடைபெற்றது. தோழர்கள் துரை—சுந்தரேசன், இரா. சம்புநாதன் முதலியோர் வாழ்த்துரை பகர்ந்தனர்.

## தாராவி

14-9-47. காலை 9 மணிக்கு தாராவி லக்கடி சால் 6 எண் இல்லத்தில் அரிகேசநல்லூர் ஆதிதிராவிட வாலிப ஐக்கிய சங்கத்தின் 1-வது ஆண்டு வருஷப்பூர்த்தி விழா அ. ச. சுப்பையா அவர்களின் தலைமையில் அதி விமரிசையாக நடைபெற்றது.

"தீப்பொறி"

(திராவிட வார இதழ்)

ஆசிரியர்:- கோரநாதன்

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

விபரங்கட்கு:—

M. K. T. சுப்பரமணியம்

352. திருவொற்றியூர் ஐரோடு

வண்ணாரப்பேட்டை சென்னை.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணு **திராவிடநாடு** ஆண்டுசந்தா ரூ 7

# அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தார்.

[நக்கீரன்]

விசாரசருமர் என்பவர் திருச்சேய்ஞலூரில் இருந்த ஒரு பார்ப்பன அடியவர். அறுபத்து மூவரில் ஒருவர். அவ்வூர்ப்பார்ப்பனருடைய பசுமாடுகளை மேய்ப்பது இவர்தம் பணி. கறவைப்பசுக்கள் தரும்பாலைக் கறந்து, மணலாற் செய்யப்பட்ட சிவலிங்கத்தின்மீது பெய்து மகிழ்வது இவரால் மேற்கொள்ளப்பட்ட சிவத்தொண்டு. இங்ஙனம் நிகழ்வதைக் கண்ட வழிப்போக்கன் ஒருவன், அதனை அவ்வூர்ப் பார்ப்பனர்களிடம் சொன்னான். அவர்கள், விசாரசருமரின் தந்தை எச்சதத்தன் என்பவனை அழைத்து, "உன்னுடைய பிள்ளை எங்கள் பசுக்களின் பாலைக் கறந்து மணலிற் பெய்து பாழாக்குகிறான்" என்று சொன்னார்கள். அதற்கவன், "இஃதெனக்குத் தெரியாது; பிழை பொறுத்தருள்க; இனி அங்ஙனம் நிகழாது பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று கூறி, விசாரசருமர் மாடுகளை மேய்க்கும் இடத்திற்குச் சென்று, ஓரிடத்தில் மறைந்து, அங்கு நிகழ்வதைப் பார்க்கையில், பால் குடங்குடமாகக் கறக்கப்பட்டு, மணலிற் பெய்து பாழாக்கப்படுவது தெரிந்து, உடனே மறைவிடம் விட்டுமைந்தனிடம் சென்று, அவனை அடித்தான்; சீற்றத்தால் பல வெம்மொழிகள் கூறி ஏசினான்; பாற்குடங்களை உதைத்தான். அதுகண்ட விசாரசருமர், அவ்வடாத செயலைச் செய்தவன் தன் தந்தைதான் என்பதை உணர்ந்து, அவன் கால்களைத் துணிக்கக் கருதித், தமக்குமுன் கிடந்த ஒரு கோலை எடுத்தார். அக்கோல் ஒரு மழுவாக மாறிற்று. அம்மழுவால் தந்தையின் கால்களை வெட்டினார். உடனே சிவன் அங்கு தோன்றி, விசாரசருமரைத், தம் கையால் எடுத்து, "நம்பொருட்டு நீ உன் தந்தையை வெட்டினாய். இனி நாமே உனக்குத் தந்தை" என்று வாய்மலர்ந்தருளி, அவரை அணைத்து, அவருடலைத் தடவி, உச்சிமோந்து, மகிழ்ந்து, அவரை நோக்கி, "உன்னைத் திருத்தொண்டர்களுக்குத் தலைவனாக்கினோம்; நாம் உண்பன—உடுப்பன—அணிவன முதலிய எல்லாம் உனக்கே ஆகுக. அதன் பொருட்டு உனக்குச் சண்டேசுர பதத்தைத் தந்தோம்" என்று அருளினார்:

இவ்வரலாற்றில் பேசப்படும் விசாரசருமர் என்ற பார்ப்பனனுடைய செய்கை, மக்கட்பண்பையே அடியோடு மாய்க்கும் ஒரு கொடுமையாகவேஇருக்கிறது. மக்கட்பண்பை ஒரு சிறிதளவுக்காவது உணர்ந்து, அதன்படி ஒழுகுபவனும், ஒழுக வேண்டுமென்று நினைப்பவனும், இவ்வடாத செயலைப் புரிய ஒருபோதும் ஒருப்படவே மாட்டான். நாகரிகமற்ற காட்டுமிராண்டிகூட, நினைத்தாலே நெஞ்சுபதைக்கும் இந்த வெஞ்செயலைச் செய்யவே மாட்டான். ஆனால் விசாரசருமர் செய்தார் இந்த அரும்பணியினை! எப்படிப் பட்ட விசாரசருமர்? படியாத அறிவுகெட்ட முண்டமா அவர்? அல்ல! அல்ல!!

> "........அங்கம் ஆறும் உடன் நிறைந்த, சந்தமறைகள் உட்பட முன் தலைவர் மொழிந்த ஆகமங்கள்..........."
>
> "குலவு மறையும் பலகலையும் கொளுத்துவதன் முன் கொண்டமைந்த..........."

என்று, அவரது அறிவின் திறம் பற்றிச் சேக்கிழாரே கூறியுள்ளார். மேலே கூறப்பட்ட சிட்சை—வியாகரணம்—சந்தோவிசுதி — நிருத்தம் சோதிடம்—கற்பம் இன்னும் உள்ள பலகலையையும் விசாரசருமர்கற்றுத் தேறியவர், கற்றுத் தேறியவர் என்றால், ஒரு ஆசிரியர் முன்னிலையில் பாடம் கேட்டவர் என்றுதான் எவரும் நினைப்பர், விசாரசருமரைப் பொறுத்தவரையில் அதுதான் இல்லை. அவர், கொளுத்துவதன் கொண்டமையும் திறம்படைத்தவர், அதாவது, ஆசிரியர் ஒன்றைக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னரே அதன் பொருளைத்தாமே விளங்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர். இத்துணை அளவு அறிவுக்களஞ்சியமாகச் சேக்கிழாரால் புகழப்பட்ட விசாரசருமர்தான், பாற்குடங்களை உடைத்தவர் தன்தந்தைதான் என்பதை நன்குணர்ந்த பின்னரும், முன்பின் எண்ணிப்பாராமல் கையில் கிடைத்ததை எடுத்து அவர் காலைத் துண்டித்தலாகியகொலைபாதகத்தைச் செய்தார். கொலையை ஒரு கிள்ளுக்கீரையாக மதித்து அதனைக் கூசாது செய்து முடிக்கும் வாய்ப்பு, அன்பையே சிவமாகக் கொண்டுள்ள அடியவர் குழாங் கட்கேயன்றி மற்றெவர்க்கும் கிட்டாது. அன்புக்கும் கொலைக்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்புபோலும்! பிறர்மாட்டுஅன்புகாட்டுவதென்பது, அவர்களைக் கொலை செய்வதேயாகும் என்ற பொருளையே பெரிய புராணம் திருவிளையாடற் புராணம்போன்ற நூல்களும் அவற்றில் பேசப்படும் சைவ சமய நெறிகளும் நமக்கு எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. தாயைப் புணர்ந்து— தந்தையைக் கொன்ற தனயனைத் தருவித் தம்பால் சேர்த்துக் கொண்டார் சிவன் என்பதாகத் திருவிளையாடற்புராணத்திலும் ஒரு நிகழ்ச்சி உள்ளது. இன்னும் இவை போன்ற பல கொலைச் செயல்கள், சமய நூல்களில் மலிந்து கிடக்கின்றன. அவை தம்மை எல்லாம் ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இனி, விசாரசருமர், தம்மிடம் மேய்ப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட பசுக்களை மேய்ப்பதையேதம்முடைய கடமையாகக் கொள்ளாமல், அப்பசுக்கள் தரும்பாலைக் குடம் குடமாகக் கறந்து மணலிற் பெய்து பாழாக்கியது பொறுத்திடுதற்கரிய பெருங்குற்றமென்பது மட்டுமன்றி, நம்பிக்கைத் துரோகமுமாகும். ஆனால், தன்னைப்பெற்ற தந்தையையே கொல்லும் 'தகைசால் அன்பரை'ப்பார்த்து, நம்பிக்கைத் துரோகம் செய்தார் என்று குற்றம் சாட்டுவது, மலையை விழுங்கியவன் ஒரு கடுகை எப்படி விழுங்கலாம் என்ற குற்றச்சாட்டை அவன் மீது ஏற்றுவதுபோலாகும்.

இனி, விசாரசருமருக்குத், தாமே அப்பசுக்களை மேய்க்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டதற்குக் காரணம்:— முன்னர் அப்பசுக்களை மேய்த்துக்கொண்டிருந்த இடையனை, ஒருநாள், ஒரு இளங்கன்றுப்பசு முட்டப் போயிற்று, அவன் அதைக் கோலால் அடித்தான், அதைக்கண்ட விசாரசருமரின் நெஞ்சம் பதை பதைத்தது. அன்று முதல் அப்பசுக்களை மேய்க்கும் பொறுப்பை விசாரசருமரே ஏற்றுக்கொண்டார். ஓர் இளங்கன்று இடையனை முட்டப்போனதற்காக அவன் அதை அடித்தான். பசுக்கள் ஒன்றையொன்று முட்டிக்கொள்ளும்போதும், பிறரை முட்டும்போதும், அவற்றைமேய்ப்பவன் அங்ஙனம் நிகழ்வதைத் தடுப்பது முறை-தடுக்கவேண்டும். இதனை ஒரு பெருங்குற்றமாக எண்ணுகின்றார் விசாரசருமர்! எப்படிப்பட்ட விசாரசருமர்? பெற்றதந்தையையே கோல்லும் அளவுக்கு நெஞ்சுரம் பெற்றவர். இப்படிப்பட்டவருடைய நெஞ்சுதான், இடையன், தன்னை முட்டவந்த கன்றுக்குட்டியை அடித்தவுடன் பதை பதைத்ததாம்! எவ்வளவு இளகியநெஞ்சு இவருக்கு!

இனி, விசாரசருமர் பசுக்களை மேய்க்க முற்பட்டதற்கு இன்னொரு காரணம் என்னவென்றால், "பசுக்களின் உறுப்புக்களில் தேவர்களும் முனிவர்களும் இருக்கிறார்கள்! புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றன! சிவபிரான் முழுக்கிற்குப் பஞ்சகவ்வியமளிக்கும் பெருமையைப் பசுக்கள்பெற்றிருக்கின்றன! அவைகளின் சாணம் திருநீற்றிற்கே மூலம்! ஆண்டவன் ஊர்தியாகிய இடபம் பசுக்கள் இனத்தைச் சேர்ந்தது!" என்பதாகும். இடையன், தன்னை முட்டவந்த கன்றுக்குட்டியை அடிப்பதைக் கண்டவுடனே விசாரசருமருக்குப் பசுக்களின் பெருமையைப் பற்றிய எண்ணங்கள் ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றி, அவைகளைத் தாமே மேய்த்தல் வேண்டுமென்ற முடிவுக்கு வரும்படி செய்துவிட்டது. ஆனால், தம்மை அடித்தவரும் பாற்குடங்களை உடைத்தவருமான தன் தந்தையைப் பற்றி எணணிப் பார்க்க அவரால் முடியாது போயிற்று! எப்படி முடியும்? அவர்தான் ஆசிரியரின்றி அறிவு பெற்றவராயிற்றே! ஆசிரியரிடம் அறிவு பெறாதவருக்கு அன்னை தந்தையைப்பற்றி அறிய முடியாது போனாலும், ஆநிரைகளைப்பற்றி அணுவளவும் பிசகின்றி அறியமுடிந்ததே! ஆநிரைகளைப்பற்றி யென்றால், அவை குறித்துச் சாதாரணமாகவா அறிய முடிந்தது? அன்று! அன்று!! அவை போடும் சாணியில் இருந்து அவை தம்மில் குடியேறி வாழும் தேவர்கள்வரை எல்லாவற்றையுமே ஒன்றும் விடாமல் அறிய முடிந்தது! இச்சொல்லப்பட்டவை குறித்த விளக்கங்கள்தானே, ஆசிரியரின்றி அவரால் கற்கப்பட்ட நூல்களில் நுவலப்பட்டுள்ளன! பசு மாட்டினின்றும் கிடைக்கப்பெறும் சாணிக்கும் சிறுநீருக்கும் விளக்கங்கள் கூறப்படும் நூற்களில், அன்னை தந்தையைப் பற்றிய விளக்கங்களை எப்படி எதிர்பார்க்க முடியும்?

இனி, விசாரசருமரால் சிவபூசைக்காக வைக்கப்பட்ட பாற்குடங்களைத் தம்முடைய காலால் உதைத்த அவரது தந்தை எப்படிப்பட்டவர் என்பதையும் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டுமன்றோ! விசாரசருமரின் தந்தையாரைப்பற்றிக் கூறவந்த சேக்கிழார்,

> "அருமை மணியும் அளித்து
> அதுவே நஞ்சும் அளிக்கும்
> அரவுபோல், இருமை வினைக்
> கும் ஒருவடிவாம் எச்சதத்தன்
> உளனானான்."

என்று கூறியுள்ளார். அதாவது, பாம்பினிடத்தில் மாணிக்கமும் நஞ்சும் இருப்பதுபோல், முறையே நல்வினையும் தீவினையும் இருந்ததாம். அதாவது விசார சருமரைப்பெற்றதை நல்வினையென்றும், சிவபூசையைக் குலைத்ததைத் தீவினையென்றும் சேக்கிழார், எச்சதத்தனைப்பற்றி விளக்கம் கூறியுள்ளார். சிவபூசையிற் சிறிதும் வழுவாது நிற்கவல்ல ஒரு புதல்வனைப்பெற்றெடுக்கும் அளவுக்கு நல்வினைசெய்த எச்சதத்தன்பால், சிவபூசையைக் குலைக்கும் தீவினை எப்படி அமைந்ததென்பதுதான் தெரியவில்லை. பாம்பினிடத்து மணியும் நஞ்சும் இருப்பதுஇயற்கை. ஆனால், சிவபூசை செய்யவல்ல ஒரு புதல்வனைப்பெற்றெடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுகூடிய எச்சதத்தனிடம், அச்சிவபூஜையையே குலைக்கும் தீயஎண்ணம் எப்படி இருக்கமுடியும்? பாம்பின் மேற்கோள் இச்சொல்லப்பட்ட நிகழ்ச்சிக்கு ஒரு சிறிதும் பொருந்தாதே! கடைத தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதுபோல், யாரோ, மேய்ப்பதற்கென்று தன்னிடம் ஒப்படைத்த பசுக்களைப் பிடித்து; அவை, தம்முடையனபோல் கருதி, அவற்றின் பாலைக்கறந்து மணலில் ஊற்றிப் பாழாக்குவது அடாத செயல் என்பதை உணர்ந்ததாலன்றோ, எச்சதத்தன் தன்புதல்வனை அடித்தான். இதனைகுற்றமாகக் கருதி, இதற்காக எச்சதத்தன் குணத்தைப் பாம்பின் நஞ்சோடு ஒப்பிட்டுப்பேசுவது அறியாமையின் சிகரத்தில் நின்று ஆர்ப்பரிப்பதுபோலாகும்.

இனி, விசார சருமரின் 'அருஞ்செயலை'க்கண்ட அன்பே சிவமாக அமைந்த ஆண்டவன், அவரைவாரியெடுத்து, "நம்பொருட்டுஉன்தந்தையைக்கொன்றாய், இனி நாமே உனக்குத்தந்தை" என்றுகூறி அவரை அணைத்து, அவரது உடலைத் தடவி, உச்சி மோந்து, மகிழ்ந்தார் என்றும், அவருக்குச்சண்டேசுரபதத்தையருளி, 'உன்னைத்தொண்டர்களுக்குத் தலைவனாக்கினோம்; நாம் உண்பன—உடுப்பன—அணிவன முதலியஎல்லாம்உனக்கே ஆகுக" என்று அருள்பாலித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. தந்தையைக்கொன்று தவிர்க்கமுடியாத பழியை ஏற்றுக்கொண்ட ஒருவனை வாரியெடுத்து முத்தம் கொடுத்து, "நன்று நன்று நின்செயல்! என்னை மணலிற்கண்டு, மாநிலம் புகழும் மாண்புடைச் செயலைப் புரிந்தாய்! என்பொருட்டு உன் தந்தையைக் கொன்றாய்! இனி நானே உனக்குத் தந்தை!" என்று ஒரு 'கடவுள்' கூறினார்என்றால், அத்தகையஒருவரைக்

(14-ம் பக்கம் பார்க்க)

ஆளவந்தார்

# ★ சட்ட சபையில் ★

(1)

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் நன்மைக்காகவே நடத்தப்படும் சர்க்காரல்லவா இது! தேனும் பாலும் வழிந்தோடும் என்றல்லவா, தேர்தலின் போது கூறினார்கள். மக்களின் நம்பிக்கை, பிரசாரகர்களின், பேச்சு வேகத்திற்கு ஏற்ற அளவு தானே இருக்கமுடியும்?

இப்போது மக்களின் நம்பிக்கை மங்கிக் கொண்டு வருகிறது-காரணம்- அவர்களின் மனப்பண்பு ஒன்றும் கெட்டு விடவில்லை-நன்மைகள் வரும்வரும் என்று, காத்துக்கொண்டிருந்து, கண் பூத்துப் போய்விட்டதல்லவா—மக்களின், நம்பிக்கை மங்கிக் கொண்டிருப்பது, மந்திரிமார்களுக்குத் தெரிவதை விட, மந்திரிப் பீடத்தருகே உள்ள, சாதாரண (ஆனால் ஆரூடம் பார்த்தபடி உள்ள) சட்டசபை அங்கத்தினர்களுக்குத் தெரிகிறது, தெரிந்தால், அவர்கள் என்ன, அதற்காகத் திகைப்படைபவர்களா! பிரச்சார பீரங்கிக்குச் சற்று வேலை கொடுத்தனர்.

"பாட்டாளி மக்களே! இனி, ஏழை எளியோர் ஏங்கவும் முதலாளிமார்களின் வாழ்வு வீங்கவுமான முறை இராது-அதை நாங்கள் மாற்றி அமைத்தே தீருவோம்-நம்புங்கள்; இனி, கொழுத்த இலாபம் தரும், பெரிய பெரிய தொழிற்சாலைகளைத்,தனிப்பட்டமுதலாளிகளுக்கு விடப்போவதில்லை. சர்க்காரே,ஏற்று நடத்தப் போகிறது! எனவே, இலாபத்தை, இனிச் சீமான்கள் தங்கள் இரும்புப் பெட்டியிலே வைத்துப் பூட்டிக் கொண்டிருக்க முடியாது-ஏழை எளியோருக்கு—பொதுமக்களுக்கு-வந்து சேரும், என்று இவ்விதமாகப் பேசினர்-பேசிக்கொண்டே உள்ளனர்-மக்கள் மனதிலே, மங்கிப் போயிருந்த நம்பிக்கையைச் சற்றுக் கிளறி, பிரச்சார டானிக் தந்தனர். ஆனால் மேடை அளவோடுதான்! சட்டசபையிலே, அமைச்சர் குழுவிலே இந்த நோக்கம் கொண்டவர்கள் இல்லை. ஆளவந்தார்களுக்கும், அவர்களின் அதி வீர தீர பராக்கிரமத்தை எடுத்துக் கூறும் பராக்குக்காரர்களுக்கும் நோக்கம் ஒன்றுக இல்லை என்பது மட்டுமல்ல—நேர் மாருக இருக்கிறது. இது, வெட்ட வெளிச்சமாக்கப்பட்டு விட்டது, சின்னட்களுக்கு முன்பு.

"நெசவாலைகளைச்சாக்கார் எடுத்து நடத்தும் உத்தேசம் இருக்கிறதா?" என்று மேல் சபையிலே, கேள்வி கேட்டார் தோழர் S. B. ஆதித்தன். பாட்டாளிகளுக்காகப் பரிந்து பேசுவது, மனப்பூர்வமாக இருக்குமானல் கொழுத்த இலாபம் தரக்கூடிய, ஆலைகளைத், தனிப்பட்ட முதலாளிகளின் லாபவேட்டைக் காடாக்கக் கூடாது. பொருளாதார நிபுணர்கள் மட்டுமல்ல, பாமரரும் அறிவர், ஆலைக்காரர்கள் அடித்துக் கொண்டுள்ள இலாபம், எவ்வளவு என்று. பணமூட்டைகளுக்குப் பின்னல் அவர்கள் பதுங்கிக் கொண்டு சட்டத்தைக் கூட ஏய்த்துக் கொண்டிருக்க முடிகிறது என்பதும் சகலருக்கும் தெரியும். இந்த இலாபம் மாளிகைகளாக, மனோஹரிகளின் வைரமாலைகளாக, மதுவகைகளாக, உருவெடுப்பதும், ஊராள்பவர்களை மிரட்டவும், மயக்கவும், இந்த இலாபம் பயன்படுவதும் கடைவீதியிலேயே, பேசப்பட்டு வருகிறது. இவ்வளவு வெளிப்படையாகத் தெரிந்துள்ள, இந்த விஷயத்திலே, சர்க்கார், பொதுஜன அபிப்பிராயத்தை அறிய வேண்டும் என்றோ, பிரச்னையைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டுமென்றோ, சாக்குக் கூறக்கூட அவசியமில்லை. ஆலைகள், தனிப்பட்டவர்களிடம் இருப்பதால், முதலாளித்துவம் வளர்ந்து, நாட்டிலே பொருளாதார பேதம் அதிகரித்து அதன் விளைவாக மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்து, பொது நலன் கெடுகிறது, எனவே, சர்க்கார், இந்த ஆலைகளைத் தாமேஎடுத்து நடத்தத தீர்மானித்து விட்டது—என்று, ஒரு திட்டம் வெளியிட்டு விட்டால், அமைச்சர்கள் இருக்கும் திக்கு நோக்கித் தெண்டனிடுவர் மக்கள். பிற்போக்கு வாதிகளும், முதலாளிகளின் கங்காணிகளும் தவிர, இந்தத்திட்டத்தை வேறுயாரும்எதிர்க்க மாட்டார்கள். இப்படிப்பட்ட, மக்களின் பேராதரவைப் பெறக்கூடிய திட்டத்தை, நிறைவேற்றும் யோசனை இருக்கிறதா, என்று கேள்வி கேட்டால், ஏழைகளின் வாழ்வுக்காகவே நாங்கள் ஆட்சிப் பீடத்தில் இருக்கிறோம் என்று பேசும், காங்கிரஸ் சர்க்கார், என்ன பதில் கூறிற்று என்று எண்ணுகிறீர்கள்?

இன்னுமோர் ஐந்தாண்டுகளிலே, இது போலச்செய்ய உத்தேசம்—அதற்கான திட்டம் தயாரிக்கிறோம் என்று ஏதேனும் கூறினார்களா! அது தான் இல்லை. திட்டமாக, துளியும் தங்குதடையின்றி, மந்திரி சீதாராம ரெட்டியார் கூறினர், "அவ்விதமான உத்தேசம் எதுவும் சர்க்காருக்கு இல்லை." என்று.

மேடை முழக்கத்துக்கும் அமைச்சர் பேச்சுக்கும், எவ்வளவு மாறுபாடு! ஒளிவு மறைவு இன்றி, வெட்கமுமின்றி ஆளவந்தார் பேசுகிறார், ஆலைகளைச் சர்க்கார் நடத்தப்போவதில்லை என்று. இந்த ஒரு வாசகத்துக்கு, அமைச்சருக்குச் சிலைநாட்டுவர், ஆலைமுதலாளிமார்கள். அசுவரட்சகர் சுப்பராயன், ஆலை அரசர்களின் ரட்சகர் சீதாராமர், அந்தணரட்சகர் அவனசி, ஆளவந்தார்களின்திருக்கலியாண குணம் இப்படி அபூர்வமாக அமைந்திருக்கிறது. ஏழைகள், அவர்கள் சார்பாகப்பேசும் தீவிரவாதிகள், ஆகியோர் அமைச்சர் பேச்சைக் கேட்டுத் திகைப்பர், திகைக்கட்டுமே, அவர், கவலைப்படுகிறவரா? ஆலை அரசர்களுக்கு அபயம் அளித்துவிட்டு, அவர்களிடம் நற்பெயர் எடுக்கிறார். அடியுங்கள் கொள்ளை!—என்று கூறிவிடுகிறார். முதலாளித்துவத்துக்கு உறுதிமொழி அளிக்கிறார். "சர்க்கார்,ஏற்று நடத்தும் என்றுஎமது பிரசாரகர்கள்பேசுவர்—அது பாமரமக்களின்செவிக்கு மட்டுந்தான் — அந்தப் பேச்சின்படி நாங்கள் ஏதேனும் செய்துவிடுவோமோ என்று எண்ணி ஏக்கம் கொள்ளவேண்டாம்— சர்க்காருக்கு அவ்விதமான உத்தேசம் இல்லை" என்று ஆளவந்தார் கூறிவிட்டார். இப்படிப்பட்ட ஆட்சியைத்தான், "தவம் கிடந்து" பெற்றது தமிழ்நாடு. தமிழ்நாட்டு மந்திரி தருகிற ஆதரவு கேட்டு, மில் முதலாளிமார்கள் பூரித்துப்போவார்கள். ஆனால், குளித்துமுழுகிவிட்டு, மஞ்சள்பெட்டியில் ஓட்டுகளைப்போட்டமகாஜனங்

களின் மனம் எவ்வளவுபுண்ணுகும்! ஆளவந்தார்கள், இதுபற்றிக்கவலைப் படாத காரணம் என்ன? எவ்வளவு கொதிப்பும் அதிருப்தியும் ஏற்பட்டாலும், கடைசிநேரத்தில்'மகாத்மா' வின் பெயரைக்கூறி, மக்களை மயக்கலாம், என்ற தைரியம்தான்!எத்தனை நாளைக்கு, இப்படி மயக்கி மஞ்சள் குளித்துக்கொண்டிருக்க முடியும்! மக்கள் எவ்வளவு காலத்துக்கு இதைச் சகித்துக் கொள்ளப்போகிறுர்களோ, தெரியவில்லை.

* * *

ஆளவந்தார்களின் போக்கு, மேலும் வெளிப்படப் பல ருசிகரமான சம்பவங்கள், நடைபெற்றன இம்முறைசட்டசபைக்கூட்டத்திலே. காங்கிரஸ்காரர்கள்தானே, கேவலம் பதவிப்பித்தத்துக்குத்துளியும் இடந்தராத, பற்றற்றவர்கள்! பதவியில் இருக்கிறுர்களேயொழிய, அவர்களுக்குப் பதவிமோகம் கிடையாதல்லவா!! அவர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் அவ்விதந்தானே பேசுகிறுர்கள். பேசட்டும் பாபம்! அவர்கள் பதவியிலே மோகம் கொண்டவர்கள் மட்டுமல்ல, பதவிக்காக, ஒருவரை ஒருவர் சூது சூழ்ச்சியினுல் வெட்டி வீழ்த்தவும் பின் வாங்காதவர்கள் என்பது, சட்டசபைப் பேச்சிலேயே விளக்கமாகத் தெரிகிறது. இந்த உண்மை, தூயமனமுடைய காங்கிரஸ் நண்பர்களுக்கு, குமட்டலாகத் தான் இருக்கும். ஆனுல், அதற்கு, நாம் என்ன செய்ய முடியும்!

மடாலயங்களிலே, நடப்பதாகக் கூறிக்கொள்வார்கள், மடாதிபதியைவீழ்த்திவிட்டுப், பட்டத்துக்கு வருவதற்காக,மடாதிபதிக்குஅடுத்தபடி உள்ளவர்வேலை செய்வார்என்று. அந்த முறையைக்காங்கிரசார், ஆட்சிப்பீடம்பெறக் கையாண்டனர், என்பது தெளிவாகிவிட்டது-வேறு கட்சிக்காரர் கூறி அல்ல, காங்கிரசார் பேச்சினுலேயே, தெரிகிறது.

பதவி இழந்த பிரகாசம் பந்துலு, பட்டினி கிடக்கும் மக்களுக்காகப் பரிந்து பேசத்தொடங்கினுர் சட்டசபையில். காலா வெங்கடராவ், எனும் அமைச்சர், இடையே சிரித்தார். பிரகாசம் பந்துலுவுக்குக் கோபம் வந்தது! வராமலிருக்குமா? கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, அன்று அவர் சட்டசபைக்குள் நுழைந்திருக்கிறுர், இந்த உணவுப் பிரச்னை விஷயமாகப்பேசி, மந்திரி சபையைக் கண்டித்து, மக்களின் கோபத்தைக் கிளப்பி விடுகிறேன்- என்று சூள் உரைத்துக்கொண்டு. வண்டி வண்டியாகக் காரணங்கள், ஏன், மந்திரிமார்களின் திட்டம் நிறைவேறவில்லை என்பதை விளக்கக் கொண்டுவந்து பேசுகிறுர். அந்தச் சமயம், காலா சிரித்தால், பந்துலுவுக்குக் கோபம் வராமலிருக்குமா? அதிலும், யார் இந்தக் காலா? மன வாடு! மனயொக்க அந்தமைன ஆந்திரதேசமு! அதுமட்டுமா? நாம் பார்த்துத்தூக்கிவிட்டஆசாமி! நமது சிஷ்யன்! இப்படிப்பட்ட காலா, இன்று மந்திரியாக இருக்கிறேம் என்ற தைரியத்திலே, நாம் பதவியிலே இல்லை என்ற தைரியத்திலே, சட்ட சபையிலே, நமது பிரசங்கத்தின்போது, சிரிக்கிறுர்! எவ்வளவு நெஞ்சழுத்தம்! — என்று ஆந்திர கேசரி எண்ணுதிருக்க முடியுமா? கேசரியின் சீற்றத்தைக் கண்டார் காலா! மேலும் ஒருமுறைசிரித்தார், கேசரி, முறைத்தார். காலா சொன்னுர், "பேசுங்கள், நான் தங்கள் பேச்சைத்தடுக்கவில்லை" என்றுர். பிரகாசம் "தெரியுமே எனக்கு, எப்படிப்பட்ட தவறுக்கும், ஏதாவது தக்க சமாதானம் கூறுவதிலே, அமைச்சர், சமர்த்துள்ளவர் என்பது தெரியும்" என்றுர். இந்தச் சீற்றத்தை, ஒரு சிறு ஹாஸ்யத்தின் துணைகொண்டு, சாகடித்தார் காலா. "எல்லாம் குருஜீயின் கடாட்சம் தான்! அடியேனுக்கு ஏதேனும் திறமை இருக்குமானுல் குருஜீ, தந்த பிச்சைதான்" என்றுர். பிரகாசம் கொதித்தார், "சிஷ்யன்! நல்ல சிஷ்யன்! குரு சிஷ்ய சம்பந்தம், எப்படி இருந்தது என்பது தெரியுமே எனக்கு. இந்தப் பரமானந்த சீடன் தான், என்னைப் பதவியிலிருந்து கீழே தள்ளிவிட்டு, தான் பதவியில் அமர, சூதுசெய்தார். குருபக்தியின் இலட்சணம் இது. நான் இதுநாள் வரையில் இதனை வெளிப்படையாகக் கூறவில்லை — இன்று கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது—அவசியத்தைக் காலாவே உண்டாக்கினுர்- ஆகவே கூறுகிறேன்-என்பதவியைப் பறிக்க வேலை செய்த இந்தக் காலா வெங்கடராவ்தான், என் சிஷ்யர் என்று கூறினுர்"—என்று சரமாரியாகப் பேசினுர்—சாடினுர் என்று கூடச் சொல்லலாம்.

பதவிக்காகக் காங்கிரசாருக்குள், நடைபெற்ற சூதுகள், சூழ்ச்சிகள், எவ்வளவு கீழ்த்தரமானதாக இருந்திருந்தால், பிரகாசம்காரு, சட்டசபையிலே, அதுபற்றிப் பேசவேண்டிய அளவு கோபம் பிறந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். அதுபோலவே பதவிபோய்விட்டதே என்பதால், எவ்வளவு, ஏமாற்றம், சோகம், இருந்தால், வயிறெரிந்து, சட்டசபையிலே, பேசவேண்டிய நிலை பிறந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். ஒருவரை ஒருவர் வீழ்த்த, அதிலும் குருவைவீழ்த்தச் சீடர், துணிவது என்றுல், பதவிமோகம் எவ்வளவு அதிகமாக அவர்களைப் பிடித்து ஆட்டி இருக்கவேண்டும் என்பதையும் எண்ணிப் பாருங்கள். இவர்கள்தான், மற்றக் கட்சியைக் கேலி செய்தனர், பதவி வேட்டைக் கட்சியினர் என்று. சட்டசபைசிரிக்கிறது —நாடு அறிந்து, சிரிக்கிறது, இவர்கள் ஆடின வேட்டையைப் பற்றிக் கேள்விப்பட்டு. வேட்டையிலும், எப்படிப்பட்ட வேட்டை? குருவை வீழ்த்த, சீடர் வேலை செய்த வேட்டை! சட்டசபையிலே, பேசி, ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டிய அளவு, கோட்டைக்குள்ளே, சதிச்செயல்கள் நடைபெற்றுள்ளன, என்பது, சட்டசபைப் பேச்சினுலே தெரிகிறது.

ஏழைகளின் சார்பிலே, இருக்கப் போவதில்லை, என்பதை, ஒரு அமைச்சர், ஆலை சம்பந்தமான பிரச்னையின்போது கூறுகிறுர். வேறேர் மந்திரியின் பேச்சையும் போக்கையும் கண்டித்து மாஜி முதலமைச்சர்பேசுகையில்,பதவிக்காகக், காங்கிரஸ் கட்சிக்குள் நடைபெற்ற 'வஞ்சனை'யை வெளிப்படுத்தினுர். இந்த இலட்சணத்தில் உள்ள ஆளவந்தார்கள்தான், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்காகஆட்சி நடத்துபவர்களாம்! பொது மக்கள், இப்போதும், இதேகருத்துக் கொண்டுள்ளனரா? சட்டசபை நடவடிக்கைகளிலே, வெளிப்படும் உண்மைகளைக், கூர்ந்து கவனிப்போர், மஞ்சள் சர்க்காரின், இலட்சணத்தைப் புரிந்துகொண்டிருப்பர். முதலாளித்துவத்துக்கு ஆதரவு தரவும், பதவிக்காக ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக்கொள்ளவும், தயாராக இருக்கிறுர்கள் ஆளவந்தார்கள்!

## காஞ்சிபுரம் முனிசிபல் தேர்தல்

—

காஞ்சி நகரசபைத் தேர்தலின் ஓட்டு எண்ணிக்கை விவரம்.

1 வது வார்டு;— P. அண்ணமலை முதலியார் (சு) 3, V. கிருஷ்ணசாமி முதலியார் (கா) 422.

2 வது வார்டு:— R. M. வீராகவ முதலியார் (கா) போட்டியில்லை.

3 வது வார்டு:— டாக்டர் P. S. சீனிவாசன் (கா) 262, C. V. ஏகாம்பர முதலியார் (சு) 259, சிங்காரம்மாள் (பெ. தொ. கா.) போட்டியில்லை.

4 வது வார்டு:— C V. இராசகோபால் முதலியார் (சு) 252, R. வரததாத்தாச்சாரி (கா) 114.

5 வது வார்டு :— T. M. V. சுப்பிரமண்ய முதலியார் (சு) 238, M. K. சீனிவாசன் (கா) 159, K. M. துரைசாமி ஐயங்கார் (சு) 68.

6 வது வார்டு:— K. K அருணசல செட்டியார் (கா) போட்டியில்லை.

7 வது வார்டு:— M. பொன்னுசாமி முதலியார் (சு) 382, G. K. கண்ணன் (கா) 150.

8 வது வார்டு:— மு, வேலாயுத முதலியார் (சு) 278, ஆதிகேசவலு செட்டியார் (கா) 273.

9 வது வார்டு:— நடேச முதலியார் (சு) 185, கந்தசாமி முதலியார் (சு) 105, நாகைய்ய செட்டியார் (சு) 118, G. குப்புசாமி முதலியார் (கா) 21.

10 வது வார்டு:— V. K. R. K. கோவிந்தராசு முதலியார் (கா) போட்டியில்லை.

11 வது வார்டு:— V. வரதராசுலு நாயுடு (சு) 292, M. கண்ணப்ப முதலியார் (கா) 202, பாலசுந்திர முதலியார் (சு) 77, சின்னவரதய்யா (ஆ. கா.) 226, பாலகிருஷ்ணன் (ஆ. சு.) 146.

12 வது வார்டு:— P. L. கோனேரி செட்டியார் (கா) போட்டியில்லை,

13 வது வார்டு:— P. K. சாமி சா (கா) போட்டியில்லை. ஜீவானந்தம் (கி.கா.) போட்டியில்லை.

14 வது வார்டு:— K. P. சாமிநாத முதலியார் (கா) 289, ஆனந்த முதலியார் (சு) 194, V. S. V. தங்கவேல் முதலியார் (சு) 24.

15-வது வார்டு:— N. M. ஜெயரத்தின செட்டியார் (கா) 186, பட்டாபிராம் (சு) 155.

16-வது வார்டு:— N. கண்ணப்பிள்ளை (சு) 173, சரவணப் பெருமாள் முதலியார் (சு) 157, A. அருணசல முதலியார் (சு) 110, தாண்டவராய முதலியார்(சு) 22.

17-வது வார்டு:— P. வடிவேல் நாயகர் (கா) 335, K. தானப்ப நாயகர் (சு) 306, பொன்னுரங்க நாயகர் (சு) 7.

18-வது வார்டு:— அருணசல முதலியார் (சு) 299, நாகலிங்க முதலியார் (கா) 272, குப்புச்சாமி முதலியார் (சு) 10.

19-வது வார்டு:— ஆறுமுக முதலியார் (சு) 281, இராசு முதலியார் (கா) 227.

20-வது வார்டு:— P. R. சரவண முதலியார் (சு) 210, முருகப்ப முதலியார் (கா, 182.

21-வது வார்டு:— N. செங்கல்ராய நாயுடு (கா) 296, C. V. M. அண்ணமலை (சு) 202.

22-வது வார்டு:— V. கண்ணப்பர் (சு) 456, சாரங்கபாணி நாயுடு (கா) 387. P. A. அப்துர் ரகிமான் (மு—சு) போட்டியில்லை.

23-வது வார்டு:— B. சையத் காசிம் சாய்பு (முஸ்—சு) 774, சோஹன் ராஜ் (சு) 619, A. குப்புச்சாமி நாயுடு M. L. A. (கா) 389, H. M. அப்துல் காதர் (சு) 97, R. சோட்டே சாகிப் (கா) 255, P. மாணிக்கம் (சு) 45, பாபுனீ சாபீ (சு) 40.

24-வது வார்டு:— நடேச முதலியார் (கா) 301, P. கல்யாணசுந்தர முதலியார் (சு) 223.

25-வது வார்டு:— C. S. V. இராசப்பா (சு) 187, N. S. இராசரத்தின முதலியார் (கா) 121, சாரங்கபாணி நாயுடு (சு) 13.

26-வது வார்டு:— M G. சக்கரவர்த்தி (கா) 367, ரங்கநாத முதலியார் (சு) 220.

27-வது வார்டு:— C. S. வரதாச்சாரி (சு) 333, M. தேசப்பன் (கா) 332.

✻

10-ம் பக்கத் தொடர்ச்சி

தின் வருமானத்திற்கேற்ப இத்தொகை உயர்ந்து வரும்.

இந்த நிபந்தனைக்குட்பட்டுத்தான் அரசியல் ஆக்கக்குழு, ஒரு அரசியல் அமைப்பை உருவாக்கவேண்டும். மன்னர்களின் சர்வாதிகாரப் போக்குக்கு மக்களாட்சியெனும் போர்வை சாத்தப்படுகிறது. மன்னர்களுக்குள்ள அறிவு மக்களுக்குக் கிடையாது என இன்றும் இந்த மாமிச பிண்டங்கள் எண்ணிக் கொண்டு இருப்பதுதான் விந்தையாகும்.

அதிகாரஞ்செய்து செய்து பழகி விட்டவர்கள், தாங்களாகமுன்வந்து அதிகாரத்தை விட்டுக்கொடுத்து விடுவார்களா? இது என்றும் நடைபெறப்போவதில்லை. மக்களாக முன்வந்து தங்கள் முன்னேற்றத்திற்குத் தடைகளாக உள்ள அனைத்தையும் ஒழித்துக்கட்ட முனைந்தாலன்றி, சமஸ்தானதிபதிகளின் சலசலப்பிற்கு ஒரு முடிவு ஏற்படப்போவதில்லை.

இன்று பெரும்பாலும் நாட்டைப் பாழ்படுத்திக்கொண்டிருக்கும் வகுப்புப் பூசல்களுக்கு, இச்சமஸ்தானதிபதிகள்தான் தூபமிட்டு வருகிறார்கள். எங்கு தங்கள் சமஸ்தானங்களிலேயே மக்கள் உரிமைப்போர் தொடுத்து விடுகிறார்களோ என்ற அச்சத்தால், மக்களின் கவனத்தை வேறு பயனற்ற காரியத்தில் திருப்பி விடுகிறார்கள். இதுவும் நீடித்து நடைபெறும் என்று சொல்லமுடியாது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே, தன்னைத் தானே தற்கொலை செய்து கொண்டபோது, இந்தச் சிறு சிறு சர்வாதிகாரிகள் இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் ஆட்டம் ஆடப் போகிறார்கள்! ஏதோ தங்கள் ஆயுள் பரியந்தமாவது மக்கள் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ளாமல் காலங் கழிக்க வேண்டும் எனும் நல்லபுத்தி இவர்களுக்கு ஏற்படவேண்டும். மக்கள் எடுத்துககொள்ளும் நடவடிக்கையைப் பொறுத்துத்தான், இதுவும் நிறைவேறும். மக்கள் ஆட்சி, சட்டசபை, எனும் சொற்களை வீசி எறிந்து, மண்டலாதிபதிகள் மேலும் மக்களை மயக்கிவந்த காலம் மலையேறி விட்டது என்பதை இந்த விசித்திரப் பிறவிகள், மக்கள் குருதி கொதிப்பேறுமுன் உணர்ந்துகொள்வது இருசாராருக்கும் நன்மை பயப்பதாகும்.

திராவிட நாடு

காஞ்சி] 5—10—47 [ஞாயிறு

# வேற்றுமை இல்லை!

ஷண்முகம் செட்டியார், இன்று இந்திய சர்க்காரின் நிதி மந்திரி. ஆனால் காங்கிரஸ் அங்கத்தவர் அல்ல. அதனாலேயே அவரைப், புதிய 'கன்வெர்ட்' எனச் சிலர் சித்தரிக்கின்றனர். இது அவ்வளவு பொருந்தாமாறு இல்லை. காங்கிரஸ் எடுத்துக் கொண்ட அரசியல் கிளர்ச்சிகளில் ஷண்முகம் கலந்து கொண்டது கிடையாது என்பது உண்மைதான்.

தியாகங்கள் பல செய்ததின் விளைவாகத் தலைவர்கள் பலர் அதிகாரத்தில் அமர்ந்துள்ளனர். அவர்கள் போன்று கிளர்ச்சிகளில் ஈடுபடாது—கிளர்ச்சிகளை அடக்குவதிலும் நையாண்டி செய்வதிலும் பழக்கம் பெற்றுள்ள—ஷண்முகம் போன்றோர், அவர்களுடன் சமத்துவமான நிலையில் ஆட்சிப் பீடத்தை அலங்கரிப்பதற்குத் தகுதியான காரணம் இருந்தாகவேண்டும். இல்லையானால் இந்தக் கூட்டுறவை விளங்கிக்கொள்வது கஷ்டமாகும். இதற்கான காரணம் என்ன?

இன்றுள்ள சமுதாய அமைப்பை அழியாமல் பார்த்துக்கொள்வது காங்கிரசின்உயிர்க்கொள்கையாகும். அதே கொள்கையைக் கொண்டவர் தான் ஷண்முகமும். இந்தக்கருத்து ஒற்றுமைதான் இவரை ஒன்றுபடுத்தியது. ஷண்முகம் பொருளியல் சிக்கறத் தெரிந்தவர் எனும் காரணத்திற்குத்தான் அவருக்கு நிதிமந்திரி ஸ்தானம் வழங்கப்பட்டது என்று சொல்லப்படுமானால், அவரினும் சிறந்த புலமை மிக்கவர்கள் பலர் உள்ளனர் என்பதை மறந்துவிடுதல் முடியாது. அத்தகையவர்கள் அங்கு இடம் பெறவில்லையே, அது ஏன்? அரசியல் அரங்கிற்கே புதியவர்களான பாபாவும், ஜான்மத்தாயும் இடம் பெற்றிருப்பதும் காங்கிரஸ் உள்ளக்கிடக்கையையும் லட்சியத்தையும் விளக்கப் போதியதாகும்.

இந்திய வர்த்தகச் சங்கத்தினர், சென்ற திங்கள், நிதிமந்திரியாருக்கும், வர்த்தக மந்திரி பாபாவிற்கும், பம்பாயில் விருந்தொன்று அளித்தனர். அதில் நிதிமந்திரியார் கூறின சில, சிந்தனைக்குரியதாகும்.

போரின் பலனைகப் பலநாடுகளின் பொருளாதார அடிப்படை சீர்குலைந்து போயிருப்பது போல் அல்லாமல் அமெரிக்காவைப் போல் இந்தியாவின் பொருளாதாரம் வளமாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார் நிதிமந்திரியார். சாதாரணமனிதனுக்கும் அதிகாரத்திலிருப்போருக்கும் எந்தவித வேற்றுமையும் இன்று கிடையாதென்கிறார். இங்கு எதிர்காலத் தொழில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, லட்சியப் பாகுபாடுகளைக் குறித்து சர்ச்சை செய்வது காலத்தை வீணாக்கும் காரியம் என்கிறார். சர்க்கார் திட்டம் எது என்பதும் தமக்குத் தெரியாதென்றும், ஷண்முகம் சொல்லுகிறார். முதலாளித்துவ முறையா, சமதர்மப் போக்கா — எதையும் உறுதியாகக் குறிக்க முடியாதென்கிறார். ஆனாலும் முதலாளித்வ முறைக்கு இனியும் இடமுண்டு எனவும், தனிப்பட்டோர் சுரண்டல் பாதிக்கும் வகையில்சர்க்காரின்வரிக்கொள்கை இருக்காது எனவும் வாக்களிக்கிறார். இங்கு முதலாளிகள் எனும் சொல்லுக்குப் பாத்திரமான பண்பினரே கிடையாது எனவும் சாதிக்கிறார்.

நடுத்தெரு நாராயணனும் நாடாளும் மந்திரியும் சமம் என்றுகூறும் ஷண்முகம், பாடுபட்டுழைக்கும்பாட்டாளியின் லட்சியத்திற்கும், அவன் உழைப்பை உதிரத்தைக் காசாக்கும் சீமானின் லட்சியத்திற்கும் வேற்றுமை கிடையாது எனும் முடிவிற்கு வந்துள்ளாரா? இந்தியாவின் கடன் வாங்கும் சக்தி பலம் பொருந்தியதாக இருக்கும்போது, இங்கு எதிர்காலத்தொழில் திட்டங்களைச் சமுகத்தின் சொத்தாக்கநடத்துவது சாத்தியமற்றதா? ஏழையின் இன்னல் தீர்க்கும்பொருளியல்முறையைப்பகிரங்கமாசக் கூறினால், பாட்டாளிகள் நிதி மந்திரியார் மீது பகை கொள்வார்களா? பொருளாதாரத் துறையில் அனைவருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கும் தன்மையில் உற்பத்தி முறையை மாற்றினால் அன்றி, உண்மையான மக்கள் ஆட்சி நிலவாது எனும் அறிஞர்களின் சித்தாந்தத்தை நிதிமந்திரியார் கண்டதில்லையா? கேட்டதில்லையா? இந்திய சர்க்காரின் பொருளாதாரதிட்டம்எவ்வாறு இருக்கும் என்பது தமக்குத் தெரியாது என்று கூறும் ஷண்முகனார், முதலாளிக்கு அபயம் அளிக்கிறாரே, அது எதனைக் குறிக்கிறது? வியாபாரப் போட்டியைச் சமாளிக்க முடியாத நிலையைப் பெற்று விட்டதால் அல்லவா இன்று எந்த நாட்டிலும் முதலாளித்துவமுறை, அங்கங்குள்ள அரசுகளின் கட்டுப்பாடுகளுக்குள் கொண்டுவரப்படுகிறது. ஆட்சியாளரின்தலையீடு, முதலாளித்துவ முறைக்குப் பாதுகாப்புத் தேடுவதேயன்றி, மக்களின் க்ஷேமத்தைப் பெருக்க வேண்டும் எனும் கொள்கையைக் கொண்டதாகுமா? உண்மை இது வாக இருக்க, ஷண்முகம், தரணியாளும் தமக்கும், சாதாரணமனிதனுக்கும் வேற்றுமை கிடையாது என்று கூறுவது நீதியாகுமா?

தனிப்பட்டோர் தொழில் திட்டங்களுக்கும், அதனை மேலும் மேலும் பெருக்கும் முறையில் சர்க்கார் வரிக்கொள்கையும் இருக்கும் என ஷண்முகம் சொல்லுகிறார். தனிப்பட்டோர் தொழில் நடத்துவதும், அத்தொழில்கள் பெருகுவதும், அத்தொழில்களால் அவர்கள் அடையும் லாபத்தைப் பொறுத்திருக்கிறது. ஏற்றுமதியைப் பெருக்கவேண்டுமென நிதி மந்திரியாரின் சகாக்கள் பேசிவருவதும், இவருடைய சொல்லோடு இணைத்துப் பார்க்கவேண்டும். அப்பொழுது தான் ஆளுனவரின் பொதுநோக்கம் —முடிந்த கொள்கை எது என்பதை நாம் அறிந்துகொள்ள ஏதுவாகும். இங்கு ஆலைகளில் உருவாக்கப்படும் பொருள்களை எல்லாம், வெளிநாடுகளின் சந்தைகளில் விற்கவேண்டும். இன்றுள்ள நிலையில், 'ஆசியா ஆசியர்களுக்கே' என்று பேசினபோதிலும், அமெரிக்காவின் போட்டியை ஒவ்வொரு நாட்டின் சந்தையிலும் சமாளித்து ஆகவேண்டும். விலையைக் குறைத்துக்கொடுத்தாலன்றிப்போட்டியைச் சமாளிக்க முடியாது. விலையைக் குறைப்பதென்பது, பாட்டாளியின் வயிற்றைக் குறைப்பதும், இங்கு மூலப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தி ஏழை உழவர்களின் வாழ்க்கையை மேலும் மட்டந் தட்டுவதும் முக்கியமாக மேற்கொள்ள வேண்டியதாகும். இதுவும் ஓரளவிற்குத்தான் செயலாற்றக் கூடியதாகும். மேலும் உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டுமானால் சர்க்கார், பொருளுதவி செய்தாக

வேண்டும். தொழில்கள் நசித்துப் போகும் வகையில், முதலாளிகளுக்கு நிதி மந்திரியார் வரி விதிக்க மாட்டார். எனவே நடுத்தர மக்கள் மீது வரிச்சுமை ஏறும். இவ்வளவிற்குப் பின்னரும் முதலாளிகளுக்குச் சரிவர லாபவேட்டை நடைபெற வழியற்றுப் போய்விட்டால், 'தேசத்தின் கௌரவம்' காப்பாற்றப்பட வேண்டும் எனும் போர்முரசும் கொட்டப்பட வேண்டியதுதான்.

இங்கு, முதலாளிகள் எனும் பெயருக்கேற்ற பண்பினரே இல்லையென வாதிக்கிறார். இன்று முதலாளிகள் என இருப்பவர்களை எல்லாம் சாதாரண மக்கள் பட்டியிலேயே சேர்த்து விட்டார். இந்தவகையில் சாதாரணமனிதருக்கும், நிதிமந்திரியாருக்கும் ஒருதுளி வேற்றுமையும் இல்லை என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ஷண்முகத்தின் வாயுரைப்படி, பிர்லா, டாடா, டால்மியா, கங்காநாயுடு, சண்முகம் அனைவரும், நிதிமந்திரியாரைப் போன்று சாதாரண மனிதர்களே யாவர்! எனவே நிதிமந்திரியார் பேச்சிலும் வேற்றுமை இல்லை, அவரைத் தேடிப்பிடித்து ஆட்சியில் அமர்த்தியவர்கள் போக்கிலும் வேற்றுமை இல்லை.

## மதுவிலக்கும் வருமானமும்

மதுவிலக்கு, மக்களுக்குச் செய்யப்படும் மிக முக்கியமான நல்ல காரியங்களில்ஒன்று. இதனைச் செய்ய முன்வந்த சர்க்காரை நாம் உண்மையிலேயே பாராட்டுகிறோம். இன்னும், எஞ்சியுள்ள மாவட்டங்களுக்கும் மதுவிலக்குத் திட்டத்தைச் சர்க்கார் விரைவில் கொண்டுவரும் என்றும், அதனால் இந்த நல்லகாரியம் பூர்த்தியாகு மென்றும் எதிர்பார்க்கிறோம்.

மது, மக்களை மாக்களாக்கும், மக்கட்பண்பை மாய்க்கும், நாகரிகத்தை நசுக்கும், நல்வாழ்வைக் கெடுக்கும், நாணயத்தை இழக்கச் செய்யும், ஒழுக்கத்தை ஒழிக்கும், ஒற்றுமையைக் குலைக்கும் என்ற இன்னபிற தீய பழக்கவழக்கங்கள் மக்கள்பால் உண்டாவதற்குத் துணை செய்யவல்ல ஒரு நச்சுக்கருவியாக அமைகின்றதென்பதை யாரும் மறுக்க முடியாது; மன்பதைக் கொவ்வாத இக்கொடிய பழக்கத்தை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டியதே, மக்களின் நன்மைக்காக ஆட்சி புரியும் ஒரு சர்க்காரின் கடமையாகும்.

மதுவிலக்குச் செய்ய வேண்டுமென்பதன் அவசியத்தை உணர்ந்து, அதனைச் செய்ய முன்வந்த சர்க்காருக்கு, 'மதுவிலக்குச்செய்வதால்ஏற்படும் வருமானக் குறைவை வேறுவகையில் ஈடு செய்து, நாட்டுக்குச்செய்ய வேண்டிய வேறுபல நல்ல காரியங்களுக்கு அப்பணத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. மதுவிலக்குச் செய்வதால், சர்க்காருக்கு வரக்கூடிய வருவாயில் பெரும்பகுதி துண்டு விழுகின்றது. அதனை ஈடுசெய்தாக வேண்டும்.

இதற்காகச், சர்க்கார் இப்போது ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. அதாவது, இப்போதுள்ள விற்பனை வரியை இன்னும் அதிகப்படுத்தி அதன் மூலம்வரும் வருவாயை அதற்கு ஈடு செய்யலாம் என்று சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இந்த முடிவு, மதுவிலக்குப் போன்ற நல்ல காரியத்தைச் செய்த சர்க்கார், மக்களால் பாராட்டப்படுவதற்குப் பதிலாக, வெறுக்கப்படும் நிலைமைக்கே கொண்டுவந்து விடுவதாக இருக்கிறது. எப்படியென்றால், இப்போதுள்ள விற்பனைவரி, பெரிதும ஏழைஎளியவர்களையே பாதிக்கும் முறையில் விதிக்கப்பட்டுள்ளதென்பதை, இவ்வரி விதித்த அந்நாளிலேயே நாம் விளக்கிக் கண்டித்திருக்கிறோம். பொருள்களை விலைக்கு வாங்கும் ஏழைமக்களையே இவ்வரிச்சுமை அழுத்துவதாக உள்ளதென்பதையும் அன்றே எடுத்துக் காட்டியும் இருக்கிறோம். பொருள்களை வாங்கி விற்பவர்களுக்கு இந்த விற்பனை வரியால் எந்த விதமான நட்டமும் ஏற்படாதென்பதையும் தெளிவாக விளக்கியுள்ளோம்.

எனவே, ஏழை எளிய மக்களையே பெரிதும் பாதிக்கக்கூடிய விதத்தில் அமைத்துள்ள இந்த விற்பனை வரியையே மேலும் உயர்த்தி, அதனால் வரும் வருவாயைக் கொண்டு, மதுவிலக்கால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யலாம் என்று கருதுவது, ஒரு போதும் வரவேற்கக் கூடியதாகாது.

சர்க்காருக்கு வருமானம் உண்டாக வேண்டுமானால், அதனை உண்டாக்க எத்தனையோ வழிகள், ஏழை மக்களைப் பாதிக்காத முறையில் உள்ளன. அவற்றைச் சர்க்கார் மிகவும் எளிதாக மேற்கொள்ளலாம். சென்னை மாகாணத்தில்எத்தனையோ ஆலைகள், தனிப்பட்டவர்களுக்கே சொந்தமாக இருந்து, அவற்றால்ஏற்படும் மிதமிஞ்சியபெரும் வருவாயை அந்தத் தனிப்பட்டவர்களே அடைகிறார்கள். இந்த ஆலைகளை நடத்தும் பொறுப்பைச்சர்க்கார்மேற்கொள்ளுமானால், மதுவிலக்குப்போன்ற இன்னும் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்தபோதிலும், சர்க்கார் வரவு செலவுக் கணக்கில், செலவை விட வருவாயே அதிகமாக இருக்கும் நிலைமை உண்டாகும். இந்தக் காரியத்தைச் செய்வதன் மூலம், ஒருவேளை ஒரு சில முதலாளிகளின் வெறுப்புக்குச் சர்க்கார் ஆளாக நேரிட்டாலும், சர்க்கார் செய்கின்ற இக்காரியம உண்மையிலேயே ஏழை மக்களின் பாராட்டுதலுக்கும் அவர்களின் நல்வாழ்வுக்கும் உரிய ஒரு சிறந்த காரியமாகும். தும்பை விட்டு வாலைப் பிடிப்பதுபோல், ஏழைகளுக்கு நல்ல காரியம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு, அதற்காக அவர்களின் வாழ்க்கையையே நசுக்கும் இந்த விற்பனை வரித் திட்டத்தைக் கொண்டுவருவது முறையல்ல.

"ஒவ்வொருவரும் சமத்துவம் அனுபவிக்கும் சோஷலிஸ்ட் ஜனநாயகத்தை ஸ்தாபிக்கவே காங்கிரஸ் பாடுபடுகிற"தென்று 30—9—47ல் டில்லியில் தோழர் ஜவஹர்லால் அவர்கள் கூறியது உண்மையான நடைமுறைத் திட்டமானால், அதே திட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள காங்கிரசே நாட்டை ஆளும் வாய்ப்பையும் பொறுப்பையும் பெற்றுள்ள இந்தச் சமயத்தில், சோஷலிச ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக உள்ள காரியங்களைச் செய்வதில் ஏன் தயங்க வேண்டும்!

சர்க்கார்தான், இப்போது தனிப்பட்டவர்களிடம் இருக்கும் ஆலைகளைத்தாம் ஏற்று நடத்தவே முடியாதென்று சட்டசபையிலேயே வெளிப்படையாகக் கூறிவிட்டதே!

தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாகவுள்ள ஆலைகளையும் பிற வருமா

னம் தரும் துறைகளையும் சர்க்காரே ஏற்று நடத்தி, அவற்றால்வரும் வருவாயைப் பொது மக்களின்- குறிப்பாக ஏழைமக்களின் நலன்களைப் பாதுகாக்கும்முறையில்செலவு செய்தால், அதனைச் சோஷலிசம் என்று யாரும் ஒப்பபுக்கொள்ளமாட்டார்களா? உண்மையாகவே சர்க்காருக்கு ஏழைமக்களிடத்தில் அன்பும், அவர்கள் நல்வாழ்வில் விருப்பமும் இருக்குமானால், அவர்களைப் பாதிக்கும் முறையில், அவர்கள் தலையிலேயே வரிச்சுமையை ஏற்றாமல், சர்க்காருக்குத் தேவைப்படும் வருவாயை வேறு வகையில் உண்டாக்கிக்கொள்ள வேண்டும். நம்நாட்டில் எத்தனையோபேர்—சர்க்கார் உத்தியோகங்களில் இருப்பவர்கள், தங்கள் தேவைக்கு மிஞ்சிய சம்பளத்தை ஆயிரம் ஐந்நூறு என்று பெற்றுக்கொண்டு, அளவுக்கு மிஞ்சிய சுகத்தை அனுபவிப்பதன் வாயிலாக ஏழை எளியவர்களை ஏளனமாக மதிக்கும் நிலைமை மாறவும், சர்க்கார் வருமானம் அதிகப்படவும், அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளங்களை ஒரு அளவுக்கு—அவர்களின் வாழ்க்கைக்குப் போதுமான முறையில் குறைக்கலாம். இந்தக் குறைப்பால் ஏற்படும்பெருந்தொகை வருவாயைக் கொண்டு, அவர்களின் வாழ்க்கைக்கே போதாத சம்பளத்தைப் பெறும் ஏழை ஆசிரியர்களின் குறையையும், மதுவிலக்கால் ஏற்படும் வருவாய்க் குறைவையும் போக்கலாம்.

இவை, சோஷலிச ஜனநாயக சர்க்காருக்கு நாம் கூறும் யோசனைகள்—நடைமுறையில் செய்யக்கூடிய திட்டங்கள் — ஏழைமக்களைப் பாதிக்காதவை—ஆனால், விற்பனை வரி போன்ற ஏழைகளைப் பாதிக்கும் திட்டங்களே இந்நாட்டுச் சோஷலிசம் என்ற போக்கில் காரியங்கள் நடைபெறுமானால், சோஷலிசத்தை உணராதவர்களால் செய்யப்படும் காரியங்களே அவையென்று அதனை அறிந்தோர் கூறுவர்.

✲

11-ம் பக்கத் தொடர்ச்சி

டில் நுழைந்தன. ஒன்றுபட்டிருந்த நாம் சிறு சிறு கூட்டங்களாகப்பிரிக்கப்பட்டு வலிவிழந்தோம்! வாழ்விழந்தோம்! வறுமையில் சிக்கி வதைகிறோம்!

நாம் இருபத்தைந்து ஆண்டுகளாகவே கலப்பு மணத்தை ஆதரித்துப் பேசியும், கதைகளாகவும் கட்டுரைகளாகவும் தீட்டியும் வந்திருக்கிறோம். எவ்வளவோ கலப்பு மணங்களைச் செய்வித்தும் இருக்கிறோம். ஆனால் அதற்காக எதிர்ப்பையும் பழிச் சொல்லையும் பரிசாகப் பெற்றோமே ஒழியப், பாராட்டு மொழி பெற்றோம் இல்லை.

ஆனால் அன்பர் ஆச்சாரியார் இரண்டாண்டுகளுக்கு முன்பு பம்பாயில் கலப்பு மணம் தேவை என்று பேசினார். உடனே தேசியப் பத்திரிகைகள், நாட்டிலே *முதன்முறையாக, யார் உள்ளத்திலும் எழாத சீர்திருத்தக் கொள்கை, ஆச்சாரியாரின் அறிவுத்தடாகத்திலே, அரும்பிப் பூத்த செக்கச் சிவந்த செந்தாமரைக்கருத்தைப்போலப்பாராட்டின! அவ்வளவு இனவெறி அவர்களிடம் தாண்டவமாடுகிறது!

ஒரே கொள்கை! நம் தலையில் கல்லாக விழுந்தது, ஆச்சாரியார் கழுத்தில் மலர்மாலையாக விழுந்தது! அவர் இனம் வேறு, நம் இனம் வேறு என்ற வித்யாசத்தைத் தவிர்த்து வேறென்ன காரணம் கூறமுடியும்?

பெண்களுக்காகப் பரிந்து பரிந்து வேசுவதும், எழுதுவதும் ஆண்களாகவே இருக்கும் இன்றைய நிலைமை மாறவேண்டும். பெண்களும் கருத்தோவியங்களைத் தீட்டவேண்டும். தங்கள் கஷ்டங்களை அவர்களே எழுதினால்தான் உள்ளது உள்ளபடியேயிருக்கும். படிப்போர் உள்ளத்தையும் உருக்கும்! நம் நாட்டுப் பெண்மணிகள், ருஷிய நாட்டுப் பெண் எழுத்தாளர் வாண்டா வாஸிலேவ்ஸ்காவைப் போல எழுதவேண்டும். அந்த இன்பப் புதிய நாள் எந்நாளோ?

✲

## விசித்திரப் பிறவிகள்!

உலகத்து அதிசயங்களில் ஒன்றாகக்கருதப்படவேண்டியவர்கள் இந்தச் சமஸ்தானாதிபதிகள். அந்தமான் போன்ற தீவுகளை அவர்களுக்கு என ஒதுக்கிவைத்து, அவர்கள் அனைவரையும் அங்கு குடியேற்றுதலே, அவர்களால் இதுவரை மக்கள்பட்ட தொல்லைகளுக்குப் பரிகாரமாகஇருக்கும். பெரும்பாலான சமஸ்தானங்களில், அங்குள்ள மக்கள் இன்றுவரை சாதாரண உரிமைகளைக் கூடப்பெற்றிருக்கவில்லை. மன்னர்களின் எதேச்சாதிகாரங்களும், இம்மென்றால் சிறைவாசமும், ஏன் என்றால் வனவாசமும் எனும் போக்கில்தான் இவர்கள் ஆண்டு வந்திருக்கிறார்கள். இனியும் இவர்களைக்கொலுவீற்றிருக்கச் செய்வது கொடுமையிலும்கொடுமையாகும். மக்களுக்கே ஆளும் அதிகாரம் எனும் கோட்பாட்டை மேற்கொள்ளல்வேண்டும். நல்லாட்சிக்கிளர்ச்சி இன்று நாடெங்கும் மூலை முடுக்களிலெல்லாம் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் தங்களுக்குள்ள அதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக, தக்காணத்திலுள்ள சமஸ்தானாதிபதிகள் சதி செய்வதில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களுக்குள்ளாகவே ஒரு ஐக்கிய ஏற்பாட்டைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். அப்பகுதியிலுள்ள சமஸ்தானங்களை ஒன்றுபடுத்தி வயதில் மூத்த மன்னரின் அதிகாரத்தின் கீழ்கொண்டு வரப்போகிறார்களாம். அதன்பெயர் ஐக்கிய தக்காண சமஸ்தானம் என்பதாம்.

ஒரு புதிய அரசியல் அமைப்பு ஏற்படுத்தவும், அதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட ஓர் அரசு ஆக்கக்குழு அமைக்கவும் திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தஅரசு ஆக்கக்குழுவிற்கு சுயேச்சையாக நடந்துகொள்ளும் உரிமை கிடையாது. அதன் அதிகாரத்தைக் கட்டுப்படுத்திவிட்டார்கள்.

இராஜபிரமுகர், லோகசபை என இருசட்ட சபைகள் புதுஅமைப்பில் இருக்குமாம். அந்தக்கூட்டில்சேரும் சமஸ்தானாதிபதிகளில் அதிக மூப்படைந்தவர் சரிவாதிகாரியாக இருந்துகொண்டு, இருசபைகளின் துணையுடன் அதிகாரஞ் செய்வாராம். மந்திரி மண்டலம் ஒன்றும் சிருஷ்டிக்கப்படும். அதனை ஆக்குவதும் அழிப்பதும் மன்னரின் தனிச் சுதந்திரமாகும். மந்திரிமண்டலத்தை மக்கள் நெருங்கவும் முடியாது. அதன் செயலைக்கட்டுப்படுத்தச்சட்டசபைக்கு அதிகாரம் கிடையாது. இருசட்ட சபைகளும் இயற்றும்சட்டங்களுக்கு உயிர் கொடுப்பதும், அந்த மன்னரின் அதிகாரத்திற்குட்பட்டதாகும்.

சமஸ்தானாதிபதிகளின் செலவிற்கான தொகை ரூபாய் 50000-க்குக் குறையாது. ஒவ்வொரு சமஸ்தானத்

(7-ம் பக்கம் பார்க்க)

# அந்நாள் எந்நாளோ!

[இராதாமணாளன்]

"கேட்டீரா ஐயா செய்தியை! விதவையாம், கைம்பெண்ணாம், கஷ்டப்படுகிறார்களாம்! நீதியா, நேர்மையா என்று நம்மையே கேட்கிறான் இவன்! சுத்தமுட்டாள்! அவள் பூர்வஜென்மத்திலே செய்த பாபத்தால், குங்குமம், மஞ்சள், பூ, சகலத்தையும் இழந்தாள்! அவளுக்கு மறுமணம் செய்ய வேண்டுமாம்? நீதான் சொல்லேன், கெட்டபால் நல்ல பாலாகுமா? பட்ட மரம் துளிர்க்குமா? வெம்பியகாய் கனியாகுமா?"

—அன்று.

"மேல் நாடுகளைப் பார்த்தாகிலும் நாம் தெளிவுபெற வேண்டாமா? அங்கெல்லாம் பெண்களுக்கு எவ்வளவு சுதந்திரம் தந்திருக்கிறார்கள்? கட்டிய கணவன் உயிரோடு உலாவும்போதே, அவனை விலக்கிவிட்டு வேறு கல்யாணம் செய்துகொள்ளும் இந்த நாகரிக நாளிலே, கணவனை இழந்து கண்ணீர் சிந்தும் இளம் விதவைகளுக்கு மறுமணம் கூடாதென்று, அறிவும் தெளிவும் பெற்ற எவனாவது முன்வந்து கூறமுடியுமா?

—இன்று.

* * *

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு கூட விதவைகளுக்கு மறுமணம் தேவை என்ற நியாயமான முறையீட்டிற்கும் பலத்த எதிர்ப்பு இருந்தது. ஆனால் அதே விதவா விவாகம் இன்று சர்வ சாதாரணமாகி விட்டது. விதவைகள் அனைவருக்கும் மறுமணம் செய்துவிட்டார்களா என்பதல்ல நாம் இங்கு கவனிக்க வேண்டியது. ஆனால் அன்று எந்தப் பேச்சுக்கு எதிர்ப்புப் பலமாகயிருந்ததோ, அதே பேச்சு இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது!

அன்றைக்கும் இன்றைக்கும் இடையே எத்தனை ஆண்டுகள் கழிந்திருக்கும், அன்று ஒருவன் சொன்னதை இன்று பலரும் சொல்லவும், ஒப்பவும் இப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கவும், எவ்வளவுபேர் அல்லும் பகலும் உழைத்திருப்பார்கள்? எவ்வளவு எதிர்ப்புகளுக்கிடையே வேலை செய்திருப்பார்கள்!!

இந்த மாற்றம் எவ்வளவு பேர்களுடைய உழைப்பையும், பொருளையும், இளமையையும், அறிவையும் உறிஞ்சியிருக்கும்!

மறுமணம் மட்டுமல்ல, பெண்கள் முன்னேற்றம், அன்றிருந்த சமுதாய விலங்குகள், மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைச் சிறிது சிறிதாக மாற்றி, சமுதாயத்தைச்சீர்திருத்தச் சலியாது உழைத்தவர் பலர்!

வங்காளத்தில், வாழ்ந்த சீர்திருத்தவாதி, பண்டிட் ஈஸ்வர சந்திர வித்யாசாகரர்,, இளந்தலைக் கைம்பெண்கள் இன்னலில் துடிதுடித்துக்,கண்ணீர் கசிவதைக்கண்டு உள்ளம் பதைபதைத்து, விதவைகளின் நலனுக்காக உழைக்க முன்வந்தார். "விதவைகள் மறுமணச் சீர்திருத்தச் சட்டம்" ஒன்றை 1856-ஆம் ஆண்டு கொண்டுவந்தார். விதவாவிவாகம் சாஸ்திரத்திற்கு விரோதமானதல்ல என்பதைவிளக்க முயற்சித்து, ஒரு சிறு துண்டுப் பிரசுரத்தையும் வெளியிட்டார்.

பெண்களுக்குக் கல்வி அவசியம் என்பதை விளக்கிப் பேசியதோடு நின்றுவிடாமல், பல பெண் பாடசாலைகளை ஏற்படுத்தி அவர்களுக்குக் கல்வியளித்தும் வந்தார்.

பக்கபலமோ, பிறர் உதவியோ இன்றி அவர், தன்னந் தனி மனிதராக நின்று, பற்பல விதவா விவாகங்களைச் செய்வித்திருக்கிறார். அப்படி முதன் முறையாக இந்திய உபகண்டத்திலே, விதவா விவாகம் 1865-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்தது.

குழந்தை மணத்தின் கொடுமையையும், ஒருவனே பலமனைவிகளை மணக்கும் வழக்கத்தையும் வன்மையாகக் கண்டித்தார். பண்டிட் அவர்கள், ஊருக்கு உபதேசியாக மட்டுமிராமல், தன்குடும்பத்திலும் சீர்திருத்த வாடை வீசச் செய்தார். தன் மகனுக்கு ஒரு விதவையைக் கல்யாணம் செய்வித்தும், தன் பெண்களுக்குப் பதினொன்கு, பதினைந்து வயதான பிறகுதான் மணம் செய்வித்தும், தன் கொள்கைகளுக்குத் தானே எடுத்துக்காட்டாக விளங்கினார்.

அவர் உழைப்பின் பயனாக 1861-ஆம் ஆண்டு, பம்பாயில் 'விதவா விவாகச் சங்கம்' ஏற்பட்டது.

1870 ஆம் ஆண்டிலிருந்து மேன்கார், ரேனடே, விஷ்ணு பண்டிட் ஆகியோரும் இந்து விதவைகளுக்கு மறுமணம் தேவை என்பதை ஆதரிக்கவும், அதற்காகப் பணியாற்றவும் முன்வந்தனர்.

P. M. மலபாரி, 1884 ஆம் ஆண்டிலிருந்து பெண்களின் நலத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தன் வாழ்நாளைச் செலவழித்து வரலானார். "குழந்தை மணமும், இந்தியாவில் திணிக்கப்பட்ட கைம்மையும்" என்ற நூலைத் தீட்டி 1888 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

இப்படியாகப் பல அறிஞர்கள், பெண்களின் பரிதாப நிலைமையைப் பற்றி, பேசியும் எழுதியும் அரசாங்கத்தின் கவனத்தைக் கவர்ந்தார்கள்.

சீர்திருத்தவாதிகளின் பக்கம் நின்ற நியாயமும், அவர்கள் எடுத்துக்காட்டிய காரணங்களும், பண்டிட் சந்திர வித்யா சாகரர் 1860-ஆம் ஆண்டுகொண்டு வந்த பெண்களுக்குப் பனிரண்டு வயதிற்கு மேல்தான் மணம் செய்யலாம் என்ற வயது நிர்ணயச் சட்டத்தைச் சர்க்கார் 1891 ஆம் ஆண்டு நிறைவேற்றினர்.

'1891 ஆம் ஆண்டுச் சட்டத்தை' பலர் பலமாக எதிர்த்தார்கள். நாட்டின் பலப்பல மூலை முடுக்குகளிலிருந்தும் கண்டனங்கள் எழுந்தன. மற்றமாகாணவாசிகளைவிட வங்காளிகள்தான், மதமே ஆபத்தில் சிக்கிக்கொண்டது என்று ஓலமிட்டும், பலத்த எதிர்ப்புக் காட்டியும் வந்தனர்.

சீர்திருத்தவாதிகள் பலத்த எதிர்ப்புக்களுக் கிடையே சிக்கிய நேரத்தில், அவர்கள் உள்ளம் உடையாது காத்து, ஊக்குவிக்க, வைதிகரும் இந்துமத பக்தருமான லோகமான்ய பாலகங்காதர திலகர் முன்வந்து, தானும் அச்சட்டத்தை ஆதரிப்பதாகக்கூறினார்.

அச்சட்டம், குழந்தை மணத்தை முற்றும் நிறுத்தமுடியாமல் போயி

னும், சிறிது சிறிதாகக் குறைத்துக் கொண்டேவரப்பயன்பட்டது பிறகு வயது நிர்ணயம் பனிரண்டிலிருந்து பதின்மூன்றாக உயர்த்தப்பட்டது.

1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் என்ற பெயரிலே, இது நாட்டில் நடமாடும் சட்டமாயிற்று!

பாபு சசிபடாபேனர்ஜி, கல்கத்தாவிற்கு அருகேயிருந்த பெரனகூர் என்ற ஊரிலே முதன் முறைபாக 1887-ம் ஆண்டு, "விதவைகள் இல்லம்" ஒன்றைஆரம்பித்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பண்டிதாராமபாய் என்பவர் 'சாரதாசதன்' என்ற விடுதியை இந்துவிதவைகளுக்காகப் பம்பாயில் திறந்தார். அவ்விடுதி பிறகு பூனாவிற்கு மாற்றப் பட்டது.

அவ் விடுதியிலிருந்த பல பெண்கள் கிருத்துவ மதத்தில் சேரஆரம்பித்ததைக் கண்ட, இந்து மதக்காப்பாளர், D. K. கார்வி பூனாவிலேயே 'இந்து விதவைகள் விடுதிச் சங்கம்' ஒன்றை 1896-ம் ஆண்டில் திறந்தார். பிறகு அவர் உயர்ந்த லட்சியங்களோடு அதனை 'இந்திய மாதர் சர்வகலாசாலை' யாக 1916-ம் ஆண்டு மாற்றிப், பெண்களுக்கு மேல்படிப்புத் தரலானார்.

தேவதாசி வழக்கத்தைப் பெண்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட பலரும் கண்டித்தனர். பிரமோஸ் முதலிய சமுதாய சீர்திருத்தக்காரர்கள் அம்முறையைப் பலமாக எதிர்த்தனர். அந்தக் கேவலமான வழக்கத்தை ஒழிக்க அவர்கள் அரும்பாடு பட்டார்கள்.

அப்பொழுது சென்னை கவர்னராகயிருந்த லார்ட்வென்லாக்(1891-1896) என்பவர் தேவதாசிகள் ஆடிய நடனத்தைப் பார்க்கவும் மறுத்தார். நாட்டிய நங்கைகளின் கைவளைவு, நெளிவுகளைப் பார்க்கவும் கண்கூசிய முதல் அரசாங்க அதிகாரி அவர் தான்.

"கோயிலுக்கென்று பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் கொடிய பழக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் எந்தக்கோயில் அதிகாரியும் தண்டிக்கப்படுவார்" என்ற சட்டத்தை 1906-ம் ஆண்டு பம்பாய் சர்க்கார் நிறைவேற்றியது. மைசூர் அரசாங்கமும் 1909-ம் ஆண்டு அவ்விதம் பொட்டுக்கட்டும் சம்மந்தமாகச் கோயில்களில் விழாக்கள் நடத்துதல் கூடாதென்று தடை விதித்தார்கள்.

கிருத்துவப் பாதிரிமார்கள்நடத்தி வந்த பள்ளிக்கூடங்களின் மூலமாகவும், இந்திய சீர்திருத்த இயக்கங்களின் முயற்சியாலும், பெண்கல்வி நாளுக்கு நாள் நாட்டிலே வளர்ந்து கொண்டே வந்தது.

1885-ம் ஆண்டு, பெண்களுக்கு வைத்தியக்கல்வி மிகமிக அவசியமென்பதைப் பல அறிஞர்கள் உணரத் தொடங்கினர். அதற்காகப்பலர் பிரசாரம் செய்து, சென்னை வைத்தியக் கல்லூரியில் முதன் முறையாக 1875-ம் ஆண்டு பெண்களையும்சேர்த்துக் கொண்டனர். அதற்கு எட்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் பம்பாய் வைத்தியக் கல்லூரியில் பெண்களை அனுமதித்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே, இந்திய உபகண்டத்தில் இருந்த பற்பல ஜாதிப்பிரிவுகளைக் கண்டு உள்ளம் நொந்தனர் பல படித்தவர்கள். ஆங்கிலக்கல்வி நாட்டில் சிறிது சிறிதாகப் பரவியும் ஜாதிப் பிரிவுகள் சிறிதுகூடக் குறையாமல் அப்படியே இருந்தன. W. வார்ட்என்ற பாதிரியார் 1818ம் ஆண்டு வங்காளத்தில் ஜாதியை ஒழிக்க அரும் பாடு பட்டார். அக்காலத்தில் நகரங்களிலும் சேனையிலும், ஜாதி வெறி சிறிது தணிந்திருந்த போதிலும் கிராமங்களில் பழைய பழக்கம் சிறிதுகூடக் குறையாமல் அப்படியே யிருந்தது.

சீர்திருத்தவாதிகள் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் ஜாதி ஒழிப்பிற்காகவும் பாடுபட்டும் பூர்ணமான பலன் கிடைக்கவில்லையென்றால், இந்த நாட்டிலுள்ள பிற்போக்குச் சக்திகளின் வலிமையைத்தான் அது நன்கு தெளிவு படுத்தும்.

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாய, மத, இயக்கங்கள்" என்ற நூலிலே பேராசிரியர், சி. எஸ். சீனிவாசாச்சாரி, பெண்கள் முன்னேற்றத்திற்கும், சீர்திருத்தத்திற்கும் பாடுபட்டதாகப் பலவட நாட்டாரைப் பற்றியும் பல மதஸ்தாபனங்களைப்பற்றியும் எழுதியிருக்கிறார். அவர் பத்தொன்பதாம் நூற்றாண்டோடு மட்டும் நின்றுவிடாமல், இருபதாம் நூற்றாண்டுச்சீர்திருத்தத்தைப் பற்றியும் எழுதியுள்ளார். ஆரிய சமாஜம், பிரம சமாஜம், இராமகிருஷ்ண மடம் ஆகியவற்றைச் சேர்ந்தோர் செய்த சீர்திருத்தங்களைப்பற்றி எழுதியிருக்கிறாரே அன்றித், தமிழகத்திலே இருபத்தைந்து ஆண்டுகளாகப் பலத்த எதிர்ப்புக்கிடையே பல்வகை இன்னல்களையும் பொருட்படுத்தாது சீர்திருத்தங்களைத் செய்து வந்த,—வருகிற சுயமரியாதை இயக்கம் அவர் கண்ணிற்கோ கருத்திற்கோ ஒரு சிறிது எட்டியதாகவும் எழுதவில்லை. எப்படி எழுதுவார் பாபம்? அவர் உடலில் ஓடுவதோ ஆரிய இரத்தம், அவர் கருத்திலோ நாம் எதிரிகள் என்ற நினைப்பு, இந்த மன நிலையிலே அவர் பேனா எப்படி நம் தொண்டினைத்தீட்ட, குறிப்பிட முற்படும்!

இப்படிப்பட்ட சரித்திர ஆசிரியர்களினால்தான், தகிழகத்தின், திராவிடத்தின்சரித்திரமேசரியாகவும்தெளிவாகவும் தெரியாமல் போயிற்று.

பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் சமுதாயத்திலுள்ள வளைவுகளை நிமிர்த்துவதற்காகவும் தமிழ் நாட்டில் சுயமரியாதைக்காரர்கள் காட்டிய அக்கரையும், அதற்காக அவர்கள் ஏற்ற கல்லடியும் சொல்லடியும் கொஞ்சமல்ல!

பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் தம் தள்ளாத வயதிலும் வாலிபனைப்போல சுறு சுறுப்புடன் ஊர் ஊராகச் சுற்றித் தம் பொன்னான கொள்கைகளை நாட்டாரிடம் நீட்டி, அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அறியாமையையும் அச்சத்தையும் ஓட்டி வருகிறார்.

தமிழ் நாட்டிலே நாம் விதவா விவாகத்தைப் பற்றி எவ்வளவோ பேசியும் எழுதியுமிருக்கிறோம். பல திருமணங்களையும் நடத்தி வைத்திருக்கிறோம்.

விதி, முன் ஜென்மபலன் என்ற வெட்டி வேதாந்தங்களைப் பொய்யாக்கி, ஒரு பெண்ணின் கணவன் இறப்பது அவன் விதியினாலோ, முன்ஜென்ம கர்மத்தினாலோ, அல்ல என்பதை வலியுறுத்திக் கூறி வந்திருக்கிறோம்.

"காதல் சுரக்கின்றநெஞ்சத்திலே
கெட்ட கைம்மையைத் தூர்க்காதீர்!
ஒரு கட்டழகன் திருத்தோளினைச்
சேர்ந்திடச் சாத்திரம் பார்க்காதீர்"

என்று பண் அமைத்துப் பாட்டிசைத்ததுசுயமரியாதைக்காரன்தான்.

ஆரியம் நம் நாட்டில் நுழைந்ததும், பல சாதிப்பிரிவுகளும் நாட்

(10-ம் பக்கம் பார்க்க)

# ★ அவன் பைத்தியம் ★

[மு. மாரிமுத்து]

நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகளைத் துடைத்து, அப்பாடா! என்று சொல்லி உட்கார்ந்தார் செட்டியார். பககத்தில் சுப்பிரமணிநின்று கொண்டிருந்தான்.

“ஏண்டா! மாயாண்டியை மணல் வண்டி கொண்டுவரச் சொல்லி அனுப்பினேனே! திரும்பி வந்தானா” என்றார்.

“இன்னும் வரலிங்க, அவன் பெண்சாதிக்கு உடம்பிற்கு முடியலையாம். அதுக்கு வைத்தியரை அழைச்சுக்கிட்டு, அப்படியே மணலுக்கும் சொல்லிட்டு வர்ரேன்னு சொன்னான்” என்றான் சுப்பிரமணி.

செட்டியார், சுப்பிரமணியனை ரகசியமாய்க் கூப்பிட்டு, மெதுவாக “இன்றைக்கு இரவு அக்ரகாரத்துப் பஞ்சாங்க ஐயரையும், பெரிய மடத்து நல்லதம்பிப் பிள்ளையையும் நான் கோவிலுக்கு வரச்சொன்னேன்னு சொல்லு. ஐயருகூட யாராவது பேசிகிட்டு இருந்தா, அந்த ஆளுபோன பிறகு மெதுவாக விஷயத்தை சொல்லணும் தெரியுமா?” என்றார். சுப்பிரமணி புன்னகை புரிந்தான். “இதுகூடத் தெரியாதுங்களா” என்று சொல்லித் தலையை மெதுவாக சொறிந்தான். குறிப்பறிந்த செட்டியார் 8 அணாப்பணத்தை அவனிடம் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு மறைந்தான் சுப்பிரமணி.

*  *  *

அம்பலபுரம் ஒரு பெரும் பட்டணமல்ல. சுமாரான சிற்றூர். ஊரின் ஒதுங்குப் புறத்திலே ஓர் முருகன் கோயில்.

தியாகராச செட்டியாரை அவ்வூர்ப் பணக்கார உலகம் நன்கு அறியும். சிறந்த பக்திமான். பரமனுக்காகப் பணத்தைப் பல்லாயிரக் கணக்கில் செலவளிப்பார்.

தியாகராசரின் பெருமையைக் கண்ட அவரது பெரியப்பாவின் மகன் பொறாமை கொண்டான். அவரது வளமிக்க வாழ்வை வீழ்த்த வஞ்சனை செய்தான். பஞ்சாங்க ஐயரிடம் தஞ்சமடைந்தான். சின்னத் தம்பிப் பிள்ளையின் உதவியை நாடினான். காரியம் கைகூடியது. திட்டமும் தீட்டப்பட்டது. இதே செட்டியார்தான் கதையின் ஆரம்பத்தில் பேசியவர்.

தியாகராச செட்டியார், தன் மகன் காதுகுத்திற்கு நல்ல நாள் பார்க்கப் பஞ்சாங்க ஐயருக்கு ஆள் அனுப்பிய போது, ஐயர் தனக்குள்ளாகவே சிரித்துக்கொண்டார். வலை போடு முன்வந்துவிழும் பறவையைக் கண்டு களிப்புக் கொண்டார். உதட்டிலே சிரிப்புடனும் உள்ளத்திலே விஷத்துடனும் செட்டியாரின் வீட்டை அடைந்தார்.

சாதகத்தை புரட்டிப், புரட்டிப் பார்த்த அப்புரட்டன், நீண்டநேரத்திற்குப்பின் புன்னகை பூத்தான். செட்டியாரைத் தனியே அழைத்து ஏதோ சொன்னான். ஐயர் சொல்லி முடித்ததுதான்தாமதம், செட்டியார் துள்ளிக்குதித்தார். உவகை பொங்க இல்லத்தினுள் ஏகி மனைவியிடம்விஷயத்தைத் தெளிவாகச், சுருக்கமாகப், பெருமையாகச் சொன்னார்.

“நம் அதிர்ஷடம்! நர் வீட்டுக் கொல்லையிலே ஏதோ தெய்வம்-சிலை-இருக்காம். அதைப் பார்த்துத் தோண்டி எடுத்துக் கோயில் கட்டி அக்கோயிலின் எதிரில்தான் நம் பிள்ளைக்குக் காதுகுத்த வேண்டுமாம்” என்றார்.

மறுநாள் செட்டியார் வீட்டுக் கொல்லையைத் தோண்டிப் பார்த்த போது உண்மையிலேயே ஒன்றரை அடியில் ஓர் நடராச சிலை இருந்தது.

இதனால், பக்திப் பித்தேறிய செட்டியார் மறுநாளே கோயில் கட்டவேண்டிய வேலையைத் தொடங்கச் சொன்னார். அதாவது முன்னைய முருகன் கோயில் அருகிலேயே, தில்லையானுக்கும் ஒரு திருக்கோயில் அமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. தியாகராசரின் பெரியப்பாவின் பிள்ளை—செட்டியார், ஐயர் மூவரும் கோயில் வேலையின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டனர். ஆலயம் அமைக்கும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டது.

இரவு வேளைகளில் ஆண்டவனுக்கு அமைக்கப்படும் ஆலயத்தில் சீட்டாட்டமும் பிறவும் நடக்கும் அப்படிச் சீட்டாட அழைத்துவரும்படி சொன்ன உரையாடலே கதையின் ஆரம்பத்திலே வருவது.

அன்று காரிருள் சூழ்ந்திருந்தது. இடையிடையே விண்மீன்களின் கண்சிமிட்டல் தவிர,வேறு வெளிச்சமில்லை. ஊர்க் கடைசியிலே கட்டப்படும் கோயிலின் உள்ளே வெளிச்சம் தெரிகிறது. அம்மங்கிய ஒலியிலே செட்டியார்—ஐயர் —பிள்ளை மூவரும் சீட்டாட்டத்திலே மூழ்கி இருப்பதும், பக்கத்திலே சுப்பிரமணி உட்கார்ந்திருப்பதும் தெரிகிறது.

சீட்டு விளையாட்டிலே நாட்டம் கொண்ட அந்தக்கூட்டம் தோட்டச் சுவரிலே ஒரு உருவம் ஏறிக் கோயிலினுள் குதித்து வந்ததை கவனிக்கவில்லை. அவ்வுருவமும் மெதுவாக இவர்கள் சீட்டு விளையாடிக்கொண்டிருக்கும் திக்கு நோக்கிவந்து ஓர் இருள் சூழ்ந்த இடத்தில் மறைந்து கவனித்தது.

அமைதியைக் கிழித்துக்கொண்டு பிள்ளைஅவர்கள் பேசலானார். “ஐயர்வாள்! உங்கள் யோசனையே தனி ரகம். உங்கள் சொல்படி இரண்டு நாள் முன்னதாகவே செட்டியார் வீட்டிலே நடராசர் சிலையை குழிவெட்டிப் புதைத்ததினால்தானே நாம் இப்படி உல்லாச வாழ்வு வாழ்கிறோம்” என்றார். “அடே, பொறுய்யா! இதுதானா பிரமாதம்! இனியல்லவோ நம் வேலை இருக்கிறது. செட்டியார் சொத்தில் பெரும் பாகத்தை அபகரிக்க அல்லவா திட்டம் தீட்டவேண்டும்” என்றார் ஐயர். சுப்பிரமணி பக்கத்திலிருந்த வாழைப் பழங்களை உள்ளே தள்ளுவதில் முனைந்திருந்தான். “நமது திட்டங்களெல்லாம்வெளியே மட்டும் தெரிந்துவிடக்கூடாது” என்றார் செட்டியார்.

“அது எப்படி வெளியே தெரியாமல் இருக்க முடியும், பகுத்தறிவுள்ளோர் பழமைக் கோட்டையை இடித்து, வஞ்சகரின் சூதை உலகிற்கு எடுத்துரைக்கும் இக்காளில் உங்களின் ஏமாற்றுவித்தை எவ்வாறு இனிப் பலிக்கும்” என்று ஒருகுரல் கேட்டது.

நால்வரும் நடுங்கி எழுந்தனர். பதுங்கி இருந்த உருவம் இவர்களின் எதிரில் வந்து கையை இடுப்பில் வைத்துக் கோபத்துடன் “ஆண்ட

(15-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

கடவுள் என்றழைப்பதா அன்றிக் கயவர்களின் தலைவன் என்றழைப்பதா என்பதனை வாசகர்களே, அதிலும் அத்தகைய கடவுளிடத்து அன்பு பூண்டொழுகும் 'அறிஞர்'களே முடிவு செய்தல் வேண்டும்.

ஒருவன், தன்னைப் பெற்றெடுத்த தந்தையைக் கொல்லும் அளவுக்கு ஒரு கடவுள் தன்னுடைய 'பெருந்தன்மை'யைக் காட்டிக் கொள்ளுமானால், அத்தகைய கடவுள்தான் நமக்குத் தேவையா என்பதனையும் எண்ணிப் பார்க்க வேண்டுமன்றோ! ஒருவனால் ஒரு கடவுளிடத்துக் காட்டப்படும் அன்பானது, அவனுடைய தந்தையின் உயிருக்கே முடிவைத் தேடித் தரக்கூடிய விதத்தில் அமையுமானால், அத்தகைய அன்பை அறிவுபடைத்த எவருமே விரும்ப மாட்டார்கள். ஆனால், ஆசிரியரின்றி அறிவுபெற்ற அடியவர் குழாங்கள் மட்டும் அத்தகைய அன்பைத்தான் விரும்புவர் போலும்!

இனிப், பெரியபுராணம் போன்ற தமிழிற் காணப்படும் சமயநூல்கள் எல்லாம், வடமொழிச் சமயநூல்களைப் பார்த்து எழுதப்பட்டனவேயன்றி, அவற்றில் கூறப்படும் நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டையோ அன்றித் தமிழ் மக்களையோ சார்ந்தன அல்லவென்று பலமுறை பல மறுக்க முடியாத சான்றுகளோடு எடுத்துக் காட்டினோம். அதனை வலியுறுத்தும் முறையிலேயே இங்கு பேசப்படும் நிகழ்ச்சியும் அமைந்துள்ளது. எப்படியென்றால்,

கர்க்க குலத்தில் கணபத்திரன் எனும் அந்தணன் மாலியவான் எனும் பர்வதத்தில் தன் மனைவி சுசீலை என்பாளுடன் இல்லறம் நடத்தி வந்தானென்றும்; அப்போது அமித்ரன் என்னும் விதர்ப்ப நாட்டு அரசன் அவ்விடம் வந்து, அந்த அந்தணனை நோக்கித், தான் செய்யும் அசுவமேத யாகத்திற்கு உதவியாக இருக்க அழைத்தான் என்றும்; அந்த யாகமுடிவில் அவ்வரசன், கணபத்ரன் என்ற பார்ப்பனனுக்கு அநேக பசுக்களைத் தானமாக வழங்கினனென்றும்; அப்பசுக்கள், அவன் மகன் சண்டர் என்பவனால் மேய்க்கப்பட்டனவென்றும்; பசுக்கள் தாராளமாகப் பால் தருவதைக் கண்ட சண்டர், அப்பாலைச் சுரைக் குடுக்கைகளில் கறந்து, அங்கு காணப்பட்ட சிவப் பிரதிட்டைகளுக்கு முழுக்காட்டி வந்தானென்றும்; அதனால் பால் குறைதலைக் கண்ட கணபத்திரன் மகனைக் கேட்க, அதற்கவன், கன்றுகள் முதிர்ந்து விட்டதால் பால் குறைந்து விட்டதாகக் கூறினனென்றும்; பின்னர், அவன் பாலைக் கறந்து மணலாற் செய்யப்பட்ட சிவலிங்கங்கள் மீது ஊற்றிப் பாழாக்குவதை நேரில் போய்க் கண்டு, சிவலிங்கத்தையும் பாற் குடுக்கைகளையும் தன்னுடைய காலால் இடறித் தள்ளினனென்றும்; அது கண்ட சண்டர், தாம் தருப்பை கொய்வதற்காக வைத்திருந்த கோடரியால் தந்தையின் காலைத் துண்டித்தான் என்றும்; பின்னர் சிவன் அங்கு தோன்றித் தமது அரபிராட்டியாரைக் கொண்டு துண்டிக்கப்பட்ட காலை ஒன்றுபடச் செய்து, சண்டரை எடுத்து முதுகைத் தடவிக் கொடுத்து, "இன்று முதல் சண்டிகேசன் என்னும் பெயரை அடைக" என்று கூறித் தம்முடைய பொற்கோயிலும், மணிமுடியும், மாலையும், படையலும் சண்டருக்கே ஆகும்படி அருள் செய்தார் என்றும் வட மொழிச் "சிவரஹஸ்யம்" என்னும் நூலிற் காணப்படுகின்றது.

இவ்விரு நிகழ்ச்சிகளும் சிற்சில மாறுதல்களுடன் காணப்பட்டபோதிலும், கதையின் அடிப்படை ஒன்றாகவே இருப்பதைக் காணலாம். பெரிய புராணத்தில், இந்நிகழ்ச்சியில் பேசப்படுபவரின் ஊர், திருச்சேய்ஞலூர் என்று கூறப்பட்டுள்ளது. சிவரகசியம் என்னும் நூலில் மாலியவான் எனும் பர்வதம் என்றுள்ளது.

பெயர்:— பெரியபுராணத்தில் எச்சதத்தன் என்பதைத் தந்தையின் பெயராகவும், பவித்திரை என்பதைத் தாயின் பெயராகவும், விசாரசருமர் என்பதைப் புதல்வனின் பெயராகவும்; சிவரகசியம் என்னும் நூலில், முறையே கணபத்ரன், சுசீலை சண்டர், என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பசுக்கள் அவ்வூர்ப்பார்ப்பனர்களுடையவை என்று பெரியபுராணத்திலும்; விதர்ப்ப நாட்டரசனால் கணபத்ரனுக்குத் தரப்பட்டவை என்று சிவரகசியத்திலும் உள்ளது.

பசுமாடுகள் தரும்பாலின் அளவு குறைந்ததாகக் கணபத்ரன் கூறும் முறையீடும் அதற்கு அவன் மகன் தரும் சமாதானமும் சிவரகசியம் என்னும் நூலில் காணப்படுவது, பெரியபுராணத்தில் காணப்படவில்லை.

மணலாற் செய்யப்பட்ட சிவலிங்க நிகழ்ச்சி, இருநூல்களிலும் ஒருவிதமாகவே காணப்படுகின்றது. என்றபோதிலும் வனத்தில் காணப்பட்ட சிவப்பிரதிட்டைகளுக்கெல்லாம் பால் முழுக்குச் செய்யப்பட்டதென்று சிவரகசியத்தில் இருக்கிறது.

தந்தையின் காலை வெட்டிய நிகழ்ச்சியைக் கூறுமிடத்தில், விசாரசருமர், பக்கத்தில் கிடந்த ஒரு கோலை எடுக்க, அது மழுவாக மாறிவிட்டதென்று பெரிய புராணத்திலும்; சண்டர், தருப்பை கொய்வதற்காக வைத்திருந்த கோடரியினால் தன்னுடைய தந்தையின் காலை வெட்டினார் என்று சிவரகசியத்திலும் கூறப்பட்டுள்ளது.

கடைசியாகவுள்ள சண்டேசுர பதம் வழங்கிய நிகழ்ச்சி இருநூல்களிலும் ஒரே விதமாகவே சிறிதும் மாறுபாடின்றிக் கூறப்பட்டுள்ளது.

இவ்விரு நூல்களிலும் காணப்படும் கதையின் போக்கில், ஆங்காங்கு சிற்சில மாறுதல்கள் காணப்பட்ட போதிலும், இத்தகைய ஒரு கதையை உண்டாக்கியதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது சண்டேசுரபதம் ஆகையால், அதில் யாதொரு மாற்றத்தையும் அவ்விரு நூல்களும் உண்டாக்கவில்லை, கதையின் அடிப்படையே சிதைந்துவிடும் என்ற காரணத்தால்.

எனவே, இவ்விரு நூல்களையும், தனித்தனி படிப்பவர்கள், சண்டேசுரபதத்தைப் பற்றிய நிகழ்ச்சியில் கருத்து வேறுபாடு கொள்ளாரேனும், இருநூல்களையும் ஒருங்கே படிப்பவர்கட்குச் சண்டேசுர பதத்தைப் பற்றிய ஐயம் கட்டாயம் உண்டாகியே தீரும். அதோடு, சேக்கிழார் செப்புவது உண்மையா? சிவரகசியம் சாற்றுவது உண்மையா? என்ற சிக்கலான ஐயமும் ஏற்பட்டே தீரும்.

இனி இவ்விரு நூல்களையும் ஒன்றாக வைத்துக்கொண்டு, ஒவ்வொரு நிகழ்ச்சியாக ஒப்புநோக்கிப் பார்ப்பவர்கட்குச், சேக்கிழார், சிவரகசியம் என்னும் வடமொழி நூலை வைத்துக் கொண்டே, தாம் எழுதிய பெரிய புராணத்திற்கு ஒரு கதையை உண்டாக்கிக்கொண்டார் என்ற உண்மையும் தெள்ளிதிற் புலப்படும். சிவரக

சியம் காலத்தால் முந்தியதாகையால், அதனைப் பார்த்தெழுதப்பட்டதே பெரியபுராணத்திற் காணப்படும் சண்டேசுர நாயனர் வரலாறு என்பது சிறிதும் ஐயுறவுக்கு இடமின்றித் துணிந்து கொள்ளப்படும் உண்மையுமாகும். சேக்கிழார் அறிவாரா, பெரிய புராணத்தைப் படிப்பவர்கள், அதிற் பேசப்படும் நிகழ்ச்சிகள், வேறு நூல்களிலும் கூறப்பட்டுள்ளனவா என்று ஆராய்ந்து பார்ப்பார்கள் என்பதனை! என்னவோ அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்ததுபோல், சமணம் புத்தம் முதலான சமயங்களை அழித்துச் சைவ சமயத்தை நிலைநாட்டியே தீரவேண்டுமென்ற ஆர்வத்தில் தாம் கொண்டதையும்— கண்டதையும்— காணாததையும்—கடன் வாங்கியதையும் சேர்த்து ஒன்றாகத் தொகுத்து, அதற்குப்பெரியபுராணம் என்று பெயரிட்டு, அதிற் கூறப்படுவன எல்லாம் தமிழ்நாட்டுத் தமிழ்மக்களுடைய உண்மையான வரலாறுகள் என்று எழுதிவைத்ததோடு, சில கல்வெட்டுகளையும் உண்டாக்கிவைத்து, அவை யாராலும் அசைக்க முடியாத நிலைபேறுடைய உண்மை வரலாறுகள் என்று பிறர் நம்பும்படியும் செய்து வைத்துவிட்டார்.

காலப் போக்கு எப்படி, எப்படி மாறும் என்பது சேக்கிழாருக்குத் தெரிந்திருந்தாலோ அன்றித் தெரியக்கூடிய ஆற்றல் இருந்தாலோ, ஒரு நூலை வைத்துக்கொண்டு, அதிலுள்ள நிகழ்ச்சியை அப்படியே பெயர்த்துப், பித்தளைக்குப் பொன் முலாம் பூசுவதுபோல், சில இடங்களில் சைவமூலாம் மிகுதியாகப் பூசி, அதற்கு வேறொரு பெயர் கொடுத்து, இன்னொரு நூலைப் புதிதாக உண்டாக்கியிருப்பாரா? கம்பராவது, தாம் பாடிய இராமாயணம், வால்மீகி எழுதிய வடமொழி இராமாயணத்தைப் பார்த்துப் பாடியதென்று கூறினர். ஆனல், சேக்கிழாரோ, தாம்பாடியபெரியபுராணம், வடமொழியும், வடநாட்டுத் தொடர்பும், அற்ற ஒரு தனித் தமிழ்நாட்டு வரலாறே என்று வாய்கூசாது கூறியுள்ளார். கம்பர், இராமாயணத்தில் செய்த மாறுதல்களை விடச் சேக்கிழார், பெரியபுராணத்திற்காகக் கையாண்ட மாறுதல்கள், அவர் மக்களை ஏமாற்றுவதில் கம்பரை விடத் தாமே கெட்டிக்காரன் என்பதைக் காட்டுவனவாக உள்ளன. கம்பர், சீதையை இராவணன் தூக்கிச் சென்ற நிகழ்ச்சியைக்கூறுமிடத்தில், வால்மீகி, இ ரா வ ண ன், சீதையின் கூந்தலைப் பிடித்துத்தூக்கிக் கொண்டு போனன்என்றதை மறைத்துப், பூமியோடு பெயர்த்தெடுத்துக் கொண்டுபோனன் என்று கூறியுள்ளார். ஆனல்,சேக்கிழார், விசாரசருமர்தன் தந்தையின்காலைவெட்டுவதற்காகப் பக்கத்தில் கிடந்த ஒரு கோலை எடுக்க, அது மழுவாக மாறிற்றென்று, சிவாகசியத்தில், சண்டர், தன் தந்தையின் காலை வெட்டுவதற்காகத் தருப்பை கொய்ய வைத்திருந்த கோடரியை எடுத்தார் என்று கூறியதனைஅடியோடு மாற்றி, அந்நிகழ்ச்சிக்குக் கடவுட்டன்மையும் கற்பித்துவிட்டார்.

ஆனல்,இன்றைய விழிப்படைந்த மக்களால் செய்யப்படும் எத்தனையோ விதமாறுதல்களில், பெரிய புராணமும் ஒன்றாக அகப்பட்டுஅல்லற்படும் என்பது, சேக்கிழாருக்கு எப்படித் தெரியும்?

அடுப்பெரிப்பதற்கோ அன்றித் திருநீற்றுக்கோகூட மாட்டுச் சாணத்தைப் பயன்படுத்தக் கூடாதென்றும், அப்படிப்பயன்படுத்துவதால், வயல்களுக்குப் போதிய உரமின்றி நெல் விளைச்சல் குறைந்து பஞ்சம் ஏற்பட ஏதுவாகின்றதென்று இன்றைய சர்க்காரே கூறும் நிலைமை ஏற்படும் என்பது, திருநீற்றிற்குரிய சாணத்தைப் பசுமாடு தருகின்றது, எனவே அதனை மேய்க்கவேண்டுமென்று விசாரசருமர் எண்ணினர் என்பதாகப் புராணம் எழுதிய சேக்கிழாருக்கு எப்படித்தெரியும்?

13-ம் பக்கத் தொடர்ச்சி

வன் பெயரால் ஆலயத்தில் அகப்பட்டதை அபகரிக்கும் ஆஸ்திகரே! உங்களின் திருவிளையாடல்கள் நாளை ஊர் முழுதும் அறிவிக்கப்படும்!" என்று கூறித் திரும்பிச் செல்ல அடியெடுத்து வைத்தான். மங்கிய ஒளியிலே அவனது முகம் சரியாகத் தெரியவில்லை.

திரும்பிச் சென்று கொண்டிருக்கும் அவ்வுருவத்தின் மேல், பக்கத்தில் கிடந்த ஒரு பெரிய கம்பை எடுத்து சுப்பிரமணி ஓங்கி அடித்தான். மறு விநாடி அவன் தலையிலிருந்து இரத்தம் குபு, குபு வென்று பெருக்கெடுத்தோடியது. அப்படியே மயங்கிக் கீழே விழுந்தான்

விளக்கின் வெளிச்சத்திலே அவ்வுருவத்தைக் கண்ட நால்வரும்திடுக்கிட்டனர். அவன், மணல்வண்டிக்குச் செட்டியார் அனுப்பிய மாயாண்டியின் மகன் மெய்யழகன். அவன் ஒரு சீர்திருத்த வாதி. காலையில் சென்ற தகப்பன் இரவு வெகுநேரம் வரை வாராதது கண்டு, கோயிலுக்கு அருகே வந்தபோதுபேசுமசப்தமும், வெளிச்சமும் கண்டு உண்மையை அறிய உள்ளே குதித்தான்.

"இன்னொரு அடி போடட்டுங்களா" என்று கேட்டான் சுப்ரமணி.

"வேண்டாம்டா" என நடுக்கத்துடன் மொழிந்த ஐயர், உள்ளே ஓடிக் கோயிலில் உள்ள பித்தளை விளக்கு, பாத்திரங்கள் சிலவற்றை அவன் தலையருகில் போட்டுவிட்டு விரைவாக நால்வரும் வெளியேறினர்.

பொழுது புலர்ந்தது. செட்டியார் வீட்டிலேயே குளித்துவிட்டு, திருநீறு அணிந்து, காலை உணவு சாப்பிட்டுவிட்டுக் கூலி ஆட்கள் அனைவரையும் கூட்டிக் கொண்டு வந்து ஆலயக்கதவைத் திறந்தார். உள்ளே மெய்யழகன் மெய் சோர்ந்து கீழே கிடந்தான். செட்டியார் தன்நடிப்பை ஆரம்பித்தார்.

"அடே! கோயிலிலே திருட அல்லவா வந்திருக்கிறன். ஆண்டவன் சொத்தை அபகரிக்க அல்லவா எண்ணி இருந்திருக்கிறன். இருட்டில் சாமான்களைத்தூக்கிக் கொண்டு வெளியே வர முயன்றிருப்பான். கடவுள் காரிருளை உண்டாக்கி, கண் தெரியாமல் ஆக்கி, ஏதாவது, தூணில் மோதும்படிசெய்திருப்பார்; இதுவும் வேண்டும், இன்னும்வேண்டும்இந்தத் திருட்டு நாய்க்கு"! என்று கோபத்துடன் திட்டினர். வந்திருந்த கூலிகள் அனைவரும் ஆண்டவனின் சக்தியை நினைத்து இறும்பூதெய்தினர்.

"டேய் முனியா, கருப்பா, இவனைத்தூக்கி வெளியே கொண்டு போ! முத்துச்சாமி! நீபோய்போலீஸ் ஏட்டையாவைக் கூட்டி வா" எனக்கட்டளை இட்டார்.

மயக்கம் தெளிந்து எழுந்த மெய்யழகன் தன் சொந்தப் புத்தியுடன் பேசவில்லை. இரவு அடிபட்டதில் அவனது மூளை கலங்கிப் பைத்யமானன். அவனதுஉதட்டிலிருந்துஅடிக்கடி உதிரும் வார்த்தை "கோயிலில் கொள்ளை" என்பதே.

பகுத்தறிவுவாதிபைத்தியமானன்! அவன் பைத்தியம்மட்டுமல்ல, திருடனும் கூட! யார் திருடர் என்பதை உலகம் அறியுமா?

# மருளா? மயக்கமா?

[M. சிங்காரவேலர்]

சிலர், சூன்யம் வைத்ததாகச்சொல்லும் சிலகேஸுகளைத், தாமே கண்டதாகவும், மந்திரத்தால் அந்தக் கேஸ்கள் குணப்பட்டதாகவும், தமது அனுபவத்தால் சூன்யத்தை நம்புவதாகவும், அதன் விஷயமாக இரண்டொரு கேஸ்விபரங்களையும் கூறி, அவை எவ்விதம் நடந்திருக்கக்கூடுமென வினவுகின்றார்கள். இத்தியாதி புராதன நம்பிக்கை விஷயமாக நாம் ஒன்று கவனிக்கவேண்டும். தகுந்த விசாரணையின்றி, ஆராய்ச்சியின்றிக், கண்டதையெல்லாம், கேட்டதையெல்லாம் நம்பவேண்டுமானால், எதையும் நம்பலாம். குருட்டு நம்பிக்கைக்குக்கணக்கு வழக்கென்பதில்லை. பில்லி, சூன்யம், மந்திரம் முதலிய சமாதானமெல்லாம் (Explanation) நிகழும் சம்பவங்களைத்தீரவிசாரித்து அறியாமல், கொடுக்கும் வியாக்கியானங்களே. "தும்முவதால், போன காரியம் கெட்டுவிட்டது, அவன் கண்பட்டதால், நோய்வந்தது, காரியம் குணமாயிற்று நரி முகத்தில் விழித்தபடியால்" என்ற இத்தகைய மூட நம்பிக்கைகளை, நடந்தவிஷயத்திற்கும், கொடுக்கும் சமாதானத்திற்கும், என்ன சம்பந்தம் என்ற மனப்பான்மையை வளர்ப்பதில்லை. வேடர்கள், நாளொன்றுக்கு அநேக நரிகளைப் பார்க்கின்றார்கள், அவர்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை. போகும்வழியில் சளி பிடித்தவன், ஆயிரந்தடவைதும்முகின்றான். அதனால் அதனைக்கேட்டோர் காரியங்கள் கெட்டுவிட்டதாகத் தெரியவில்லை. கோர்ட்டில் ஜட்ஜுகளை வசியம் செய்ய, மந்திரித்த குங்குமத்தை நெற்றியில் அணிந்து செல்கின்றனர். அவர்கள் கேஸ்கள் சாதாரணமாக ஜெயித்ததாகத் தெரியவில்லை. கிருத்திகை அமாவாசையில் "படுத்தார் தேரார்" என்றும் வழங்குகின்றார்கள். ஆனால்ஆஸ்பத்திரிகளில் அந்நாட்களில், நோய் அதிகரிப்பதாகத் தெரியவில்லை. ஆனால், பலர் இத்தியாதி சம்பவங்களில் நம்பிக்கை வைத்துத் தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றார்கள். இவைகளால் என்ன தெரிய வருகின்றதென்றால், சாதாரணமாக, சொன்னதையும், கேட்டதையும் நம்புவதே, நமது பழக்கமாய்விட்டது. இதே மாதிரி, பலர் சோதிடத்தையும் நம்புகிறார்கள். கிரகங்களால் நமது வாழ்வு பாதிக்கப்படுகிறதாகச்சிலர் சொல்வதை நாம் நம்புகின்றோம். கோடான கோடி மைல் தூரத்தில் இருக்கும் கிரகங்களுக்கும் நமக்குமென்ன சம்பந்தம்? என்பதை விளக்கிக்காட்டுவார் ஒருவருமில்லை.

'சூன்யத்தால், "அது நடந்தது, இது நடந்தது" என்று சொல்வதெல்லாம் நடந்த சம்பவங்களுக்கு நாம் கொடுக்கும் சமாதானங்களாகும். இந்தச் சமாதானங்கள், சரியானவையா, அல்லது கேள்விப்பேச்சா என்பதைத்தான், நிச்சயப்படுத்தவேண்டும். தொந்தரவுபடும் பெண்ணின் தாலி, கழுத்திலிருந்து காணாமலும், திரும்பக் காணப்பட்டதாகவும் வைத்துக் கொள்வோம். இதன்காரணமென்ன? சாமான்ய ஜனங்கள் சூன்யத்தால் இந்தவிதமாகச்சம்பவிக்கிறது என்று சொல்லுகின்றார்கள். இது சரியான காரணமா வென்பதுதான் கேள்வி. அந்தப்பெண்ணின்சேலை திடீரெனத் தீப்பற்றிக் கொள்கின்றதாம். கைவைக்கும் பண்டங்களில் மலம் தோன்றுகின்றனவாம்! இருக்கலாம். ஆனால் அதன் காரணமென்ன? மந்திரத்தாலா, அல்லது நாம் பொறுமையுடன் கவனிக்காத தோஷத்தால் இவ்வித சமாதானத்தைக் கொடுக்கின்றோமா?

கோபத்தில் தாலியைக் கழற்றியெறியும் பெண்கள் அநேகரைப் பார்த்துமிருக்கின்றோம். இந்தப் பெண்கள் சூன்யத்தால் செய்கின்றார்களென்றாகிலும், பேய்பிடித்துச்செய்கின்றார்களென்றாகிலும், யாரும் சொல்வதில்லை. சில வியாதியுடையவர்கள், தங்கள் சேலையைக் கொளுத்திக் கொள்கின்றார்கள். மனவெறுப்பாலும் இந்தக்காரியத்தைச் செய்கின்றார்கள். பைத்தியம் முதலிய மனவெறுப்பால் தன் மலத்தைக் கையாளும் நோயாளியைப் பார்த்துமிருக்கின்றோம். இந்தக் கேஸ்களில், பில்லி சூன்யமென்று யாரும் நம்புவதில்லை. சாதாரணமாகக் கோபத்தாலோ மன வெறுப்பாலோ, மன மாறுதலால் (Insanity) நிகழ்வதாக நிர்ணயிக்கின்றோம். நாம் பார்த்த காரியங்கள் ஜன்னிநோயால் (Nervous Disorders) நேருவது சகஜம். இவைகளைவிட ஆச்சரியமான காரியங்கள், ஜன்னிநோயால் பீடிக்கப்பட்டோர் செய்கின்றார்கள். குழந்தைகள், மலத்தைப் பூசிக் கொள்வதை அறிவின்மையால்என்று சொல்லுகின்றோம். ஆனால், அறிவை இழந்த முதியோர் செய்தால், அதை சூன்யத்தால் என்கின்றோம். ஏனெனில், குழந்தைகள் செய்வது தினக் காட்சி (Common) முதியோர்செய்வது அபூர்வம் (Rare) !!!

நரம்பைப்பற்றிய வியாதி (Hysteria) மிகுதியும் பெண்களுக்கு வருவதுண்டு. அந்த வேளையில் பல அசங்கிதமான காரியங்களைச் செய்வார்கள். தங்கள்புடவையைக்கழற்றி எறிந்து விடுவார்கள். கொளுத்திக் கொள்வார்கள். தங்கள் எச்சில் மலம் முதலிய வஸ்துக்களை, வீசிஎறிவார்கள். கண்டபடி எல்லாம் பேசுவார்கள். நரம்புபற்றிய வியாதி ஆஸ்பத்திரிகளில், இவர்கள் கோராமையைக்காணலாம். இதற்கு வைத்திய நிபுணர்களால் தான்சிகிச்சைசெய்து கொள்ளவேண்டும். இந்த நோய்களுக்கு ஆஸ்பத்திரிகளில், மந்திரங்கள் செய்வதில்லை.

மணி மந்திரங்கள், அறியாதாரிடத்தும், அநாகரீகரிடத்துமே காணலாம். இத்தியாதி நடக்கைகளை வைத்தியர்களைக் கொண்டு பார்வையிட்டுச் சிகிச்சை செய்வது தான்புத்திசாலித்தனமாகும். இல்லாவிடில் கெட்டிக்கார லாயர்களை வைத்துக் கேசை நடத்தாமல் நெற்றியில் மந்திரித்த குங்குமத்தை இட்டுக் கொண்டு ஜட்ஜு முன் காட்டுவதையொக்கும். ஒருகாலத்தில் குளிர் சுரமும், அம்மையும் பேதியும், மாரியாத்தா தெய்வங்களால் உண்டாவதாக எண்ணி இருந்தோம். இன்றைக்கும் பலகோடி பாமர மக்கள் நமது நாட்டில் தேவதைகளால் இத்தியாதி வியாதிகள் நிகழ்வதாக

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.